# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 23 ஞாயிற்றுக்கிழமை [08-08-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்: 218


## பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 8

லங்காமுடித்த கப்பலின் அடுத்த பயணிகள் சேவை அனேகமாக இம் மாதம் 20 ஆம் திகதி அளவில் இடம் பெறலாம் என்றும்—

கப்பல் புறப்படும் திகதி பற்றிய சரியான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

லங்காமுடித்த கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு தொகைப் பொருள்களுடன் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது. நாளை திங்கட்கிழமை இது காங்கேசன்துறை வந்து சேரும் என்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் - படையினர் மிக அருகருகே நின்று துப்புரவு பணியில் ஈடுபட்டனர்

## கரிகாலன் நேரில் சென்று அவதானித்தார்

வவுனியா, ஓக. 8

வன்னிக்கான போக்குவரத்துப்பாதை கண்டி — யாழ்ப்பாணம் ''ஏ9'' நெடுஞ்சாலையில் மாங்குளம் பகுதியில் திறக்கப்பட உள்ளதை அடுத்து படையினரும் புலிகளும் நேற்றும் நேற்று முன்தினமும் மிக அருகருகே நின்று கண்ணி வெடிகள் மற்றும் மிதிவெடிகள் போன்றவற்றை அகற்றி அப்பகுதியை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் காலை 11.30 மணிக்கு வவுனியா செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வதிவிடப் பிரதிநிதி ஷெரின் வொலனியின் மேற்பார்வையின் கீழ் யாழ். — கண்டி 'ஏ 9' நெடுஞ்சாலையின் முன்னணிக் காவலரண் பகுதியில் இருந்து கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணியில் படையினர் ஈடுபட்டனர்.

அதேசமயம் —

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மல்லாவி வதிவிடப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளம் ஊடான போக்குவரத்துப் பாதை நாளையே திறக்கப்படும்

## பொருள்கள் விலை திடீரென உயர்வு!

வவுனியா நகரப் பகுதிக் கடைகளில் பொருள்களின் விலைகள் நேற்றுத் திடீரென அதிகரித்தன.

வன்னிக்கான போக்குவரத்து இன்று ஆரம்பமாகும் என முதலில் தெரிவிக்கப்பட்டிருந்ததால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச்செல்லும் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவுசெய்வதில் நேற்று மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இதனை அடுத்தே இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு எடுத்துக செல்லப்படும் சில அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

28 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 32 ரூபாவாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆயிரம் தந்திகள் தேக்கம்!

கொழும்பு, ஓக. 8

கணனியில் ஏற்பட்ட பழுது காரணமாகக் கொழும்பு ரெலிக்கொம் நிறுவனத்தில் 20 ஆயிரம் தந்திகள் தேக்கமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ரெலிக்கொம் நிறுவனத்துக்குக் கிடைக்கும் தந்திகளைப் புதிய முறையில் கணனி மூலம் அனுப்புவதற்குக் கடந்த சில நாள்களுக்கு முன் ஏற்பாடு செய்யப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

வவுனியா, ஓக. 8

**வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கும் இடையிலான போக்குவரத்துப்பாதை நாளை திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது.**

வன்னிக்கான போக்குவரத்துப் பாதை ஒன்றை யாழ்—கண்டி ''ஏ9'' நெடுஞ்சாலையில் மாங்குளம் பகுதியில் திறப்பது தொடர்பாகப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டதை அடுத்து இன்று போக்குவரத்து ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஒரு நாள் தாமதமாக நாளை திங்கட்கிழமை போக்குவரத்து ஆரம்பமாகும் என ராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக் கோன் தெரிவித்தார்.

பாதை திறக்கப்படுவதற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நடவடிக்கை திருமலையில் தீவிரம்

### துறைமுகப் பகுதியில் பீரங்கிப் படகு

திருகோணமலை, ஓக 8

திருகோணமலையில் கடந்த சில நாள்களாக பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நகரின் பல்வேறு பகுதிகளிலும் திடீர் சோதனைகளும் சுற்றிவளைப்புக்களும் நடத்தப்பட்டுவருகின்றன

நேற்றுக்காலை திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலடிப் பகுதி படையினராலும் பொலீஸாரினாலும் சுற்றிவளைக்கப்பட்டது.

சுமார் மூன்று மணித்தியாலம் இடம்பெற்ற இந்தச் சுற்றிவளைப்பின்போது எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை திருகோணமலை கடற்பகுதியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடற்பகுதியில் கடற்படையினரின் ரோந்துநடவடிக்கை அதிகரித்து காணப்படுவதுடன் துறைமுகப்பகுதியில் பீரங்கிப் படகுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. (இ-5)

## சர்வ மதப் பிரார்த்தனை இன்று இறுதி நாள்

யாழ்ப்பாணம், ஓக. 8

வன்னிப் பகுதிக்கு போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்க இறை ஆசி வேண்டி யாழ். பல்கலைக்கழக வன்னி மாவட்ட மாணவர் ஒன்றியம் நடத்திவரும் சர்வமதப் பிரார்த்தனை இன்று இறுதிநாளாக நடைபெறவுள்ளது.

கடந்த ஆறு நாள்களாக நடைபெற்றுவந்த இந்த சர்வ மதப் பிரார்த்தனையில் நேற்று யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்தந்தை ஜெயசீலன், நல்லை ஆதீன முதல்வர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் பயணிகள் வசதி கருதி புதிய ஏற்பாடுகள்

### சிவில் நிர்வாக அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

விமானப் பயணிகள் தற்பொழுது எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்க்கும் விதத்தில் நாளை திங்கள் முதல் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

விமான பயணச் சீட்டைப் பெறுவதற்கு பயணம் செய்யும் அனைவரும் சமுகமளிக்க வேண்டும் என்பது தற்போதைய நடைமுறை. நாளை திங்கட்கிழமை முதல் இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் பயணம் செய்ய இருந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. - புலிகளினது ஆதரவு இன்றியே இனப்பிரச்சினைக்கு தீர்வு

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஓக. 8

விடுதலைப் புலிகளதும் ஐ. தே. கட்சியினதும் ஆதரவு இல்லாமல் சிறுபான்மை சமூகத்தினரதும், பெரும்பான்மை சிங்களமக்களதும் ஆதரவுடன் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் சம்மேளனத்தின் தேசிய மாநாடு நேற்று கொழும்புஸ்ரான்லி ஜோன்ஸ் பூங்காவில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதிமேற்கண்டவாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வழுக்கையாறு வீதியில் விபத்து

நவாலி, ஓக. 8

நவாலி, வழுக்கையாறு வீதியில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸும் டிராக்டர் ஒன்றும் மோதிக் கொண்டதில் இரு வாகனங்களும் சேதமடைந்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீலனின் இடத்துக்கு மாவை சேனாதிராஜா

கொழும்பு, ஓக. 8

கடந்தவாரம் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் கொல்லப்பட்ட நீலன்திருச்செல்வத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு மாவை சேனாதிராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வலி. வடக்கு பிரிவுக்கு 9 லட்ச ரூபா ஒதுக்கீடு

பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டின் கீழ் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு 9 இலட்ச ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி பினாக்கைக்குளம், நீலியம் பனைக்குளம் ஆகியன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. அத்துடன் மல்லாகம் குளமங்கால் வீதி, சோடாக் கம்பனி வீதி, கும்பலைக்குள வீதி, காளிகோயில் ஆராய்ச்சிசீமா வீதி, அளவெட்டி காட்டுப்புலம் வீதி, வயாவிளான் கோணாவளை வீதி ஆகியன திருத்தம் செய்யப்படவுள்ளன.

2 இலட்ச ரூபா செலவில் முன்பள்ளிகளின் கூரை அமைப்பு வேலைகளும், 50 ஆயிரம் ரூபா செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-27]

## மரண அறிவித்தல்கள்

### இலகுப்பிள்ளை பரகுரு

(இளைப்பாறிய ஊழியர் — தட்டெழுத்தாளர், தபால் திணைக்களம்)

ஏழாலை மேற்கைச் சேர்ந்த இலகுப்பிள்ளை பரகுரு (இளைப்பாறிய ஊழியர்— தட்டெழுத்தாளர், தபால் திணைக்களம்) 18-06-99 இல் வன்னி மாவட்டத்தில் இறைபதம் அடைந்தார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வி பகுரூபா (நுண்கலைப்பீட மாணவி), ஜெயரூபா, சிவரூபா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவரது இறுதிக் கிரியைகள் 20-06-99 இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ப. பகுரூபா
(மகள்)

கயட்டை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(68053)

### திருமதி இராசம்மா கனகசபாபதி

தொல்புரத்தைச் சேர்ந்த திருமதி இராசம்மா கனகசபாபதி 5-8-99 வியாழக்கிழமையன்று இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு — தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும் செ. வள்ளியம்மை, ச. கதிராசிப்பிள்ளை(மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகம் கனகசபாபதி (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன பொறியியலாளர்) அவர்களின் மனைவியும் சி. சரோஜினிதேவி (மலேசியா), க. விஜயகுமார் (ஷார்ஜா), ம. விமலாதேவி, வி. ரஞ்சிதம் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மா. சிவனேசன் (மலேசியா), வி. ரோகினி (ஷார்ஜா), வா. மனோகரன் (இலங்கை வங்கி), க. விக்னேந்திரன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜனனி, சுதாரிணி, தர்சனா, கீர்த்தனா, தர்மினி, சாரங்கன், விஷ்ணுகாந்தா, சஜீவன், சந்துரு ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்ற சண்முகநாதன், சுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா), கனகசபை (ஓய்வு பெற்ற பொறியியலாளர்), நடராஜா (மலேசியா) ஆகியோரின் சிற்றன்னையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8-8-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் தொல்புரத்தில் நடைபெற்று மூளாயில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

தொல்புரம்,
சுழிபுரம்.

(68046)

### சின்னத்தம்பி நடராசா

(நடேசுஅண்ணை. மாறாவணை)

இணுவில் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா அவர்கள் 7-8-99 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரேஸ்வரியின் பெறாமகனும் தையல்நாயகி, செல்வரத்தினம் (கனடா), வள்ளிநாயகி, தெய்வேந்திரம் (கனடா), பாலசுப்பிரமணியம் (ஆனந்தாகி ரெச்ஸ், சுன்னாகம்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கணேசபிள்ளை, தர்மராசா (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), யோகராணி (கனடா), ஜெயகுமாரி (கனடா), தனலட்சுமி, தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜிதா, சிந்துஜா, நீபன், நர்த்தனன், ஆரணி, நிறாஜினி, ரூபிகா, உஷா, ஐங்கரன், துஷ்யந்தன், கஜானர் ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற சுப்பையா, கதிர்காமநாதன், மங்கையற்கரசி, அன்னலட்சுமி, சிவசுப்பிரமணியம், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நேசரத்தினம், தனபாலசிங்கம், பகிரதி, ராஜராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கார்த்திகேசு, இரத்தினம், கதிர்காமு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-8-99) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தருமராஜா
(தருமண்ணை, [illegible])

நற்றுணை,
இணுவில் தெற்கு, இணுவில்.

(68050)

# கிளிநொச்சி, முல்லை அரச அதிபர்களை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை எதுவும் அரசுக்கு இருக்கவில்லை

## அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 8

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்களை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை எதுவும் அரசாங்கத்துக்கு இருக்கவில்லை என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தம்மை இடமாற்றம் செய்யும்படி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தமை காரணமாகவே அவரை இடமாற்றம் செய்தோம். அவரின் இடத்துக்கு சுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபராக கடமையாற்றிய இராசநாயகம் ஒரு சிவில் நிர்வாக அதிகாரி அல்லர். அப்போதைய சூழ்நிலையில் எவரும் கிளிநொச்சியில் பதவி ஏற்க முன்வராததால் அவரை நியமிக்கவேண்டி ஏற்பட்டது. ஆனால் தற்போதைய கிளிநொச்சி அரச அதிபர் ஐயாத்துரை சிவில் சேவை அதிகாரி தரத்தில் உள்ளவர் — என்றார்.

இதற்கு முன்னர் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமை ஒரு பழிவாங்கல் நடவடிக்கையே. இது குறித்து அரசாங்கம் உடனடியாக அறிக்கை வெளியிடவேண்டும் என்று கேட்டிருந்தார்.

வன்னிப் பகுதியில் உணவு விநியோகம் சீர்குலைந்துள்ள இந்த நிலைமையில் அனுபவம் வாய்ந்த இரு அரச அதிபர்களும் இடமாற்றம் செய்யப்பட்டமை துரதிஷ்ட வசமானது என்றும் ரணில் கூறி இருந்தார்.

இதற்குப் பதில் அளித்த போதே இந்த இடமாற்றங்களில் அரசுக்கு உள்நோக்கம் எதுவும் இருக்கவில்லை என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (இ-ரி)

## போதைப்பொருள் கடத்தல் முயற்சி தோல்வி

சென்னையில் இருந்து கொழும்புக்கு போதைப் பொருள்களைக்கடத்த முயன்றனர் என்று கூறப்படும் ஆறு பேர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் சிக்கினர்.

ஆறு கிலோ கிறாம் நிறை உள்ள — 75 லட்சம் பெறுமதி உடைய — இந்த போதைப் பொருளை 4 சிங்களவரும் இரு முஸ்லிம்களும் கடத்த முயன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுங்க அதிகாரிகளான ஆர் யோகனந்தன், எம். பி. மாலிபியசேன ஆகியோரே போதைப் பொருள் கடத்தப் படுவதை கண்டுபிடித்தவர்களாவர். (இ)


SHAMROCK CUP

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(Under 17)

விண்ணப்பப் படிவத்தையும் அறிவுறுத்தல்களையும் SHAMROCK கல்வி நிறுவனத்தில் (ஈச்சமோட்டை வீதி) பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 11 - 08 - 99 புதன்

போட்டி அமைப்பாளர்
SHAMROCK ACADEMY

(சி/8461)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.

இன்று
அர்ஜுன், குஷ்பு
நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே

நேரம்; 10-30, 2-30

(67708)



ராஜா
யாழ்ப்பாணம்

அர்ஜுன் - ரஞ்சிதா
மற்றும் பலர் நடித்த
ஜெய்ஹிந்த்

10-30, 2-00, 5-00

(சி/8419)



நாகம்ஸ்
சுன்னாகம்

கார்த்திக், நக்மா,
கவுண்டமணி,
ஜெமினிகணேசன்
மணிவண்ணன் நடித்த
மேட்டுக்குடி

[illegible]
(புதிய நேரம்)

[68047]



மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய

அபிவிருத்தி நிதிக்காகப் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும்

மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

தலைவர்:- திரு. இ. குணநாதன்
(அதிபர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)

இடம்:- நீர்வேலி சவாரி மைதானம்.
காலம்:- 15-08-99 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு ரூபா 10-00

பழைய மாணவர் சங்கம்
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி.

(68051)



சர்வதேச லயன்ஸ் கழகம்
உரும்பிராய்
நடத்தும்
நலிவுள்ள குழந்தைகளுக்கான
மருத்துவ பரிசோதனை

லயன் டாக்டர் செ. இந்திரராசா
அவர்கள் தலைமையில்

08 – 08 – 99 ஞாயிற்றுக்கிழமை
காலை 10. 00 மணிக்கு (புதிய நேரம்)

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் வடக்கு வீதி
ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன்
தேவஸ்தான ஆச்சிரமத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்:
லயன் டாக்டர் S. S. அருளானந்தம் அவர்கள்
(பிராந்தியத் தலைவர்)

(68054)



பேராசான்களான....

திரு. கு. சண்முகநாதன் (தலைவர்)
திரு. தா. அமிர்தலிங்கம்
திரு. மு. பரஞ்சோதி
திரு. எஸ். செந்தில்மணி
திருமதி ஏ. சண்முகானந்தன்
செல்வி யோ. கந்தையா

ஆகியோரை வாழ்த்தி வணங்குகிறோம்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா
95/96 மாணவர்கள்.
நிலையம் – 8.
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(68043)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புலிகளுடன் மீண்டும் பேசவேண்டும்

## புதுடில்லியில் கரு ஜெயசூரியா தெரிவிப்பு

புதுடில்லி, ஒக. 8

இலங்கையில் ஐ. தே. க. ஆட்சியில் இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நடந்த பேச்சுக்கள் இரு தடவைகள் முறிந்தபோதும் மீண்டும் பேச்சு நடத்த ஐ.தே.க. முன்வந்தது. எனவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண ஜனநாயக முறையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்.

கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயரும், ஐ.தே.க சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான கரு ஜெயசூரியா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேபாளம் சென்ற அவர் இலங்கை திரும்பும் வழியில் புதுடில்லி வந்த சமயம் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் தங்களது வன்முறைப் போக்கை கைவிடவேண்டும் இனப்பிரச்சினை தீரபேச்சுவார்த்தையே சிறந்த வழி என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அரசமைப்பு சீர் திருத்தங்களுக்கு எதிர்க்கட்சியான நாங்கள் ஆதரவு அளிக்கவில்லை என்று சந்திரிகா தலைமையிலான ஆளும் கட்சி குற்றம் சாட்டுகிறது. ஆனால் எதிர்க்கட்சியான நாங்கள் எங்களுக்குள்ள கடமைப் பொறுப்பை உணர்ந்து செயல்படுகிறோம் என்பதே உண்மை.

இலங்கை மற்றொரு யூகோஸ்லாவியா அல்லது பொஸ்னியா ஆவதை நாங்கள் விரும்பவில்லை. இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள் இடையில் பரஸ்பரம் நம்பிக்கை வளரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

எதிர்க்கட்சி ளை நசுக்கும் போக்கில் அராஜக முறையில் சந்திரிகா தலைமையிலான அரசு செயற்படுகிறது முக்கிய முடிவுகளை எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிக்காது தன்னிச்சையாக எடுக்கிறது. இது ஜனநாயக முறைக்கு ஏற்றதில்லை என்றார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி முன்னாள் பிரதமர் ஐ. கே. குஜ்ரால், பாரதிய ஜனதா துணைத் தலைவர் கே. எல். சர்மா உள்ளிட்ட இ தியத் தலைவர்களைச் சந்தித்து கரு ஜெயசூரியா கலந்துரையாடினார். [இ-3]

## முட்டை, இறைச்சிக் கோழி விலைகள் அதிகரிப்பு

### பாவனையாளர்கள் பாதிப்பு

அரியாலை, ஒக. 8

யாழ். நகரில் முட்டை' இறைச்சிக் கோழி என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

முட்டை ஒன்று 9 ரூபாவாகவும் இறைச்சிக் கோழி கிலோ 140 ரூபாவில் இருந்து 200 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.

இந்த விலை அதிகரிப்பால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து புறொய்லர் கோழிக் குஞ்சுகள் எடுத்துவரப்படாமையே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் முட்டையிடும் கோழித் தீனிகளின் விலை அதிகரிப்பும் முட்டையின் விலை உயர்வுக்கு மற்றொரு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது (ஐ-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ல. அழகுதுரை அவர்களின் பாசமிகு
தந்தையாரான **சின்னப்பு கந்தையா**
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
ஆசிரியர் கழகம்
யா / அச்சுவேலி ம. வி.

(68030)

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



மலர்வு: 17 - 01 - 1976

உதிர்வு: 29 - 06 - 1999

**அமரர் இராசரத்தினம் இராசகுமார்**

அந்தியேட்டி: 08-08-1999 ஞாயிறு

கனிமரமாய் பலன்தருவாய் எனக் காத்திருந்தோம்
23 ஆம் வயதினில் திடீரெனப் பட்டழிந்தாய்!

என்றும் உன் நினைவில் இருந்து வாடும்
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தற்போதைய விலாசம்:
மீனாட்சி அம்மன் கோவலடி.
தோப்பு, அச்சுவேலி.

சொந்த விலாசம்:
பரியாரி வளவு,
பலாலி மத்தி, பலாலி.

(68022)

## நாச்சிப் போட்டி நடத்த ஏற்பாடு

பாரம்பரிய விளையாட்டான தாச்சியை ஊக்குவிக்கும் முகமாக தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அதன் செயலாளர் கா. பீதாம்பரம் தெரிவித்தார். (ஐ-27)

## மாணவருக்கு புலமைப் பரிசில்

வலி, வடக்கு பிரதேசசெயலர் பிரிவில் ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 11 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மேற்படிப்புக்கான ஊக்குவிப்பாக இப் புலமைப்பரிசில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## துர்க்கை அம்மன் ஆலய உற்சவகால ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக. 8

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக வலி. வடக்குப்பிரதேச செயலக ஆலோசனை மண்டபத்தில் கூட்டம் ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் தலைமையில் இடம் பெற்ற மேற்படி கூட்டத்தில் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும், சிற்றூர்தி போக்குவரத்துச் சபையினரும் இணைந்த வகையில் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் விசேட தினங்களில்கூடுதலான சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ வைத்தியசேவை நடைமுறைகள் வழமைபோல் மேற்கொள்ளப்படும் என்றும் சுகாதார வசதிகளை சிறந்த முறையில்மேற்கொள்வதுடன் பிரதானவீதி மற்றும் கோயில் வீதி தவிர்ந்த இடங்களில் தற்காலிக கடைகள் போட அனுமதிப்பது

★ துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புசம்பந்தமாகவலி வடக்கு செஞ்சிலுவைச்சங்கத்துடன்தொடர்பு கொள்வது.

★ ஆலய வெளிவீதிகளுக்கு பௌசர் மூலம் தண்ணீர் தெளிப்பது சாரணிய உதவி சம்பந்தமாகதினசரி 50பேரின் சேவையைப் பெறுவது.

★ பக்தர்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மற்றும் உற்சவ தினங்களில் காலை 5. 30 மணியிலிருந்து இரவு 8. 00 மணிவரை வீதியை மக்கள் பாவனைக்கு அனுமதிப்பது சம்பந்தமாக படையினரின் அனுமதியைப் பெறுவது.

★ வலி வடக்கு பிரதேச சபை ஊழியர்களை உற்சவ தினங்களின்போது அதிகளவு சேவையில் ஈடுபடுத்துவது. (ஐ-ரி)

## கள்ளின் விலை அதிகரிப்பு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சிக் கொத்தணியைச் சேர்ந்த சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களில் கள்ளின் விலை ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஓஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்த இந்த விலை அதிகரிப்பின் படி தென்னங்கள் போத்தல் 15 ரூபாவாகவும் பனங்கள் 12 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

சண்டிலிப்பாய் - சீரணி
**அருள்மிகு**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்**

ஏக தின லட்சார்ச்சனையும்
சுமங்கலி தீப பூஜையும்
(திரு விளக்கு பூஜை)

லட்சார்ச்சனை :- 12 - 08 - 99 வியாழக்கிழமை
காலை 8 மணி தொடக்கம்
மாலை 4 மணி வரையும்

சுமங்கலிதீப பூஜை :- 13 - 08 - 99 வெள்ளிக்கிழமை
மாலை 3. 30 மணிக்கு

இத்தெய்வீக கைங்கரியங்களில் அடியார்கள் பங்குபற்றி அம்பாளின் அருட்கடாட்சத்தினை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தாசபை

[68037]

## நன்றி நவிலும் ஆராதனை

திருமதி சோமசுந்தரத்தின்
வாழ்க்கைக்கும் சேவைக்கும்
11 – 07 – 1999 அன்று காலமான
**திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்**
(இளைப்பாறிய அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி)
அவர்களின் ஞாபகார்த்த ஆராதனை
10–08–1999 செவ்வாய்க்கிழமை மாலை 3. 30 (SLT) மணியளவில் உடுவில் (மகளிர் கல்லூரி) தென்னிந்தியத் திருச்சபை (C S I) ஆலயத்தில் நடைபெறும்.

இந்த ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் தேநீர் விருந்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

Dr தயா சோமசுந்தரம

''அபரகிரி''
உடுவில்.

(68035)

கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!
ஹோட்டல் சீவம்ஸ்
தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்கு சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம்
ஹோட்டல் சீவம்ஸ் இன்றே விஜயம் செய்யுங்கள்!
கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம். இன்றே விஜயம் செய்யுங்கள்.
HOTEL SEIVAMS [GUEST HOUSE]
No. 29A, SANGAMITHA MAWATHA,
KOTAHENA, COLOMBO – 13
T. P. No· 326522
(68036)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்பட்ட
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (1995/ 1996)
பரீட்சையில்

அதிவிசேட பிரிவில் சித்தி அடைந்த
யா/கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி ஆசிரியை

**திருமதி பிரபாவதி இராஜசேகரன்**

அவர்களை எமது நிறுவனத்தின் சார்பில் மனமார
வாழ்த்துகிறோம்.

**போட்டோ ரவி அன் வீடியோ**
நிறுவனத்தினர்
இல. 20, யாழ். றோட்,
யாழ்ப்பாணம். [68017]



# ரஷ்யாவில் உயர்கல்வி

**கல்வியாண்டு 1999/2000**
**மருத்துவம், பொறியியல், சட்டம்**

யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

பின்வரும் பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.

I) Peoples Friendship University
[Lumumba University] (Moscow)
II) Tula Padogagical University (Tula)
III) Moscow Energical Institute (Moscow
IV) Moscow Automobile Institute (Moscow)
V.) Kursk State Medical University (Kursk)

ஆங்கில மொழியிலும் ரஷ்ய மொழியிலும் போதனைகள் நடைபெறுகின்றன. இலங்கை அரசு உட்பட சர்வதேச அரசுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி வாய்ப்புப்பெற விரும்புவோர் மேலதிக விவரங்களுக்கு கீழ் உள்ள முகவரியை நாடுங்கள்:

N. SASIKESAVAN
**Prem Book Center,**
19, New Bus Stand,
Jaffna.
Tel / Fax: 021-2404

15 - 08 - 99 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்
(சி/8416)


# நிமலன் நிழலில் ஓராண்டு நிறைவு

மண்ணில்
14
02
1927



விண்ணில்
20
07
1998

வண்ணையர்பதி

அமரர் **E P. இராசையா மகேந்திரன்**

வண்ணையம்பதியான் வள்ளல்
எண்ணமோ திண்மை சேரும்
வண்ணமே வாழ்ந்த அண்ணல்
கண்ணென மண்ணில் மேவி வாழ்ந்த
அண்ணலே அன்பு சேர்
அகவொளியே அமைதிப்பேறே
உங்கள் எண்ணமெலாம்
இதயத்துறைய ஏங்கி நிற்கும்

பாசமிகு
திருவாட்டி சிவபாக்கியம் மகேந்திரன்,
(இராசாத்தி)
சுற்றத்தார்.

179, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (67965)

உ
சிவமயம்

# இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம்
## மனமுவந்து கூறும்
# நன்றிகள் பல...

எங்களுடைய அமைப்பின் மூலம் முதன் முதலாக தமிழ்நாடு காஞ்சி காமகோடி பீடத்தில் வேதாகம பாடசாலையில் வேதம், ஆகமம், ஜோதிடம் ஆகிய பாடங்களில் முழுசித்தி பெற்று பட்டம் பெறச்சென்ற மாணவர்கள் முதன் முதலாகத் தெரிவு செய்த எமது அமைப்பின் கௌரவ வித்துவ சபை:

பேராசிரியர் கலாநிதி
பிரம்மஸ்ரீ **ப. கோபாலகிருஷ்ணா ஐயர்**
(தலைவர், இந்துநாகரிகத்துறை. யாழ். பல்கலைக்கழகம்)

மகாராஜஸ்ரீ **து. சு. ஷண்முகநாதக் குருக்கள்**
(ஆதீனகர்த்தா, மாவிட்டபுரம்)

சிவஸ்ரீ **தா. மகாதேவக் குருக்கள்**
(தர்மசாஸ்தா காயத்ரீ பீட அதிபர், இணுவில்)

சிவஸ்ரீ **மு. பரமசாமிக் குருக்கள்**
(நயினை விசேட குரு)

சிவஸ்ரீ **சி. சிதம்பரநாதக் குருக்கள்**
(திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர், மட்டுவில்)

சிவஸ்ரீ **சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்**
(நீர்வேலி, கந்தசாமி கோயில் பிரதமகுரு)
ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு

இம்மாணவர்களுக்கு மூன்றுமாதகாலம் ஆரம்பப் பயிற்சி அளித்த
தர்மசாஸ்தா குருகுல அதிபர்

சிவஸ்ரீ **தா. மகாதேவக்குருக்கள்** அவர்களுக்கும்
எங்கள் அமைப்புக்கு ஆதரவாக நற்சான்றிதழ்கள் வழங்கிய நல்லை ஆதீன முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
அவர்களுக்கும்,

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய தர்மகர்த்தா தலைவி
கலாநிதி செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களுக்கும்
யாழ்ப்பாணத்தில் இருந்து பிரயாண ஒழுங்கு செய்து தந்த
யாழ். மேலதிக அரசாங்க அதிபர்
திரு. **து. வைத்திலிங்கம்** அவர்களுக்கும்,
மாணவர்களுக்குத் தேவையான ஆவணங்களைத் துரிதகெதியில் தந்துஉதவிய பதிவாளர்
பிரம்மஸ்ரீ **ந. சதாசிவ ஐயர்** அவர்களுக்கும்,
மற்றும் மாணவர்களின் நன்மை கருதி மனமுவந்து நிதி உதவி செய்த
ஆலய முகாமையாளர்கள், பரிபாலன சபையினர், ஆதரவாளர்கள் ஆகியோருக்கும்
கொழும்பில் மாணவர்களுக்கு தங்குமிட வசதி, பாதுகாப்பு வசதி,
உணவு வசதி, பிரயாண வசதிகள் செய்த
ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
தர்மகர்த்தா திரு. **V. T. V. தேவநாயகம்பிள்ளை அவர்களுக்கும்**
அவர் சார்ந்த உதவி அதிகாரிகளுக்கும்
அந்த ஆலயக் குருமணிகளான

சிவஸ்ரீ **ஜெ. பாலசுப்பிரமணியக் குருக்கள்,**
சிவஸ்ரீ **க. சுப்பிரமணியக் குருக்கள்,**
பிரம்மஸ்ரீ **திருச்செந்தில்நாத சர்மா,**
**செல்வம் ஐயா** ஆகியோருக்கும்

நாடாளுமன்ற உறுப்பினரும் கால்நடை அபிவிருத்தி அமைச்சருமான
பெருமதிப்புக்குரிய கௌரவ **S. தொண்டமான்** அவர்களுக்கும்
அவரது பொதுச் செயலாளர்

திரு. **குமாரதாஸ்** அவர்களுக்கும்
திரு. **தேவராஜ்** (நாடாளுமன்ற அங்கத்தவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவர்)
திரு. **தில்லைநடராஜா** (இந்துசமய கலாசார அமைச்சு)
திரு. **வி. கைலாசபிள்ளை** (அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர்)
திரு. **D. பிரமநாயகம்** (Eswaran Brothers Marketing (P V T) Ltd
ஆகியோருக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு

எமது அமைப்பில் நம்பிக்கை வைத்து அனுப்பிய மாணவர்களின் பெற்றோர் அவர்களுக்கும் எமது அமைப்பின் சார்பிலும் அகில இலங்கை பிராமண சமூகத்தின் சார்பிலும் சைவ அன்பர்கள் சார்பிலும் எங்கள் மனமார்ந்த நன்றிகளையும் ஆசியையும் தெரிவிக்கின்றோம். மேலும் அமைப்பின் பிரசுரங்களை ஒழுங்காகவும் சீராகவும் பிரசுரித்து உதவிய **உதயன் பத்திரிகை ஆசிரியர்** அவர்களுக்கும் ஏனையோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

குறிப்பு: அமைப்பின் மாணவர்கள் 03-08-99 அன்றுகாஞ்சிகாமகோடி வேதாகம பாடசாலைக்குச் சென்றுள்ளார்கள். அங்கு அவர்களை விமான நிலையத்தில் வரவேற்று அழைத்துச்சென்று காஞ்சியில் மாணவர்களுக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்த **காஞ்சிப் பெரியவாள்** அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்த பிரமுகர்களுக்கும் எங்களது பணிவான நன்றிகளைக் கூறுகின்றோம். யாழ்ப்பாணத்தில் இருந்து காஞ்சிநகர் வரை மாணவர்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச்சென்ற எமது அமைப்பின்

கௌரவ பொருளாளர் **நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்** அவர்களுக்கும்
அவருடன் இணைப்பதிகாரியாகக் கடமை புரிந்த
கௌரவ பிரம்மஸ்ரீ **ம. பாலகைலாசநாத சர்மா**
அவர்களுக்கும் எமது நன்றிகளையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றோம்.

சிவஸ்ரீ
**ச. மகேஸ்வரக்குருக்கள்**
தலைவர்

பிரம்மஸ்ரீ
**கா. சந்திரசேகர சர்மா**
பொதுச் செயலாளர்

(சி/8455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காரணம் அதுவே!

இலங்கையில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் வந்தேறுகுடிகளே. சிறுபான்மையினருக்கு இந்த நாடு சொந்தமில்லை; அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்று குரல் கொடுப்பது தவறானதாகும்—

சம்ரகமுவ மாகாண முதலமைச்சர் அதாவுட செனிவிரத்னா பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''சிங்கள வீரவிதாஹன'' இயக்கத்தின் நான்காவது வருடாந்த மாநாடு கடந்த மாத முற்பகுதியில் கண்டியில் நடைபெற்றபோது அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கும் நிகழ்த்தப்பட்ட உரைகளுக்கும் பதிலாகவே மாகாண முதலமைச்சரின் கருத்து — பேச்சு— அமைந்திருக்கிறது.

இந்த நாட்டின் ஆட்சி உரிமை சிங்கள பௌத்த மக்களுக்கே உரியது. ஏனையோர் வந்தேறு குடிகளாக வந்து வாழ்பவர்கள், அவர்களுக்கு ஆட்சி உரிமை இல்லை —என்று ''வீரவிதாஹன'' இயக்க மகாநாட்டில் கலாநிதி சூரிய குணசேகரா என்பவர் தெரிவித்திருந்தார்.

இது போன்ற இனவாதக் கருத்துக்களும், வரலாற்றுத் திரிபுகளும் இலங்கையில் ஒன்றும் புதியனவல்ல. தமிழ் மக்கள் தமக்குரிய உரிமைகளை வழங்கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கிய காலத்திலேயே இத்தகைய சிந்தனை விதைக்கப்பட்டு விட்டது.

இந்தச் சிந்தனையை, அதனூடான கருத்துக்களைக் காய்களாக நகர்த்தி தென்னிலங்கையில் அரசியல் சதுரங்கம் ஆடப்படுவதும் அதனால் சிறுபான்மை மக்கள் ஒடுக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சிறுபான்மையினர் என்றால் அவர்களை எதுவும் செய்யலாம். அவர்கள் மக்கள் அல்லர் அவர்களுக்கென்று உரிமைகள் இல்லை. பெரும்பான்மையினர் கொடுக்கும் ''பிச்சையை'' ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களே என்ற கருத்து, இனவாதம்— இனத்துவேசம் என்ற உணர்ச்சி என்ற ஊசி மூலம் சிங்கள அரசியல் தலைவர்களால் அக்காலத்தில் ஏற்றப்பட்டது.

அதன் விளைவே இன்றைய நிலை. இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெறுவது போன்ற தீவிரமான போர் இந்த நாட்டில் இடம்பெறுவதற்கும் இத்தனை பேரழிவுகளுக்கும் அத்திவாரமாக அமைந்திருப்பதும் மேற் கூறிய சிந்தனையே.

அந்தச் சிந்தனையை தென்னிலங்கையில் இருந்து இல்லாமற் செய்வது என்பது மிகவும் கடினம் என்பதனையே 'வீரவிதாஹன' போன்ற அமைப்புகளின் வளர்ச்சி எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய அமைப்புகள் அரசியற் பிற்புலம், பிற்பலம் இல்லாமல் இயங்குவது என்பதும் சாத்தியமில்லை

சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் எதுவும் செய்து அடக்கி ஒடுக்கலாம் என்றஎண்ணத்தைப் போக்குவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் மனவிருப்பத்துடன் செயற்படவேண்டும். ஆளுந்தரப்பில் இருக்கும்போது ஒருகருத்தையும் எதிர்க்கட்சிக்கு மாறியதும் முந்தியதற்கு நேர்மாறான கருத்தையும் பரப்பும், முன்னெடுக்கும் வழக்கத்தை அவர்கள் கைவிடவேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலமே பேரினவாதத்தை ஒழிக்கலாம் அதாவுட செனிவிரத்னா போன்று சகல அரசியல்வாதிகளும் கருத்துச்சொல்லத் துணிய வேண்டும். பின்னர் தமது லாபம் கருதி அந்தக் கருத்தை மாற்றாமலும் இருக்க வேண்டும். இல்லையேல் இந்த நாடு சீரழிவதைத் தடுக்க இயலாது.

## ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டிக்க உகந்த நாள் எது?

யாழ்ப்பாணம், ஓக. 8

ஆடி அமாவாசை எதிர்வரும் புதன்கிழமையே (11-8-99) ஆயினும்பிதிர்த் தர்ப்பணமும் விரதமும் அடுத்த நாள் வியாழக்கிழமையே அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர் பிரம்மஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

புதன்கிழமையன்று பூரண சூரிய கிரகணம் நிகழ இருக்கிறது. இது இலங்கையில் பார்சுவ கிரகணமாகத் தோற்றும். யாழ்ப்பாணத்தில் அன்று மாலை மணி 5.49க்குகிரகணம் ஆரம்பித்து சூரிய கிரகணத்துடனேயே அஸ்தமனமடைகின்றது.

இதனால் அன்றைய திதி தோஷமடைகின்றது. சிரார்த்தம் செய்பவர்கள் மறுநாள் வியாழக்கிழமையே விரதம் அனுஷ்டிக்க வேண்டும். குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் தவிர்ந்த ஏனையோர் புதனன்று இரவு உபவாசமிருந்து மறுநாள் சூரிய தரிசனத்தின் மேல் உணவருந்துக.

மஹோற்சவம் நடைபெறும் ஆலயங்களில் அன்று நண்பகல் 12 00 மணிக்கு முன்னதாக தீர்த்தோற்சவம் கொடியிறக்கம் முதலானவற்றைச் செய்து கொள்ளவும் —

குடாநாட்டு மக்களில் பலரும் ஆடி அமாவாசையன்றுகீரிமலைபுனித தீர்த்தத்தில்நீராடச் செல்ல விரும்புவர் என்பதாலும், அன்றைய தினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தீர்த்த நிகழ்வு கீரிமலையில் நடைபெற ஏற்பாடாகி உள்ளதாலும் —

மாவிட்டபுரம் ஆலய ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்களிடம் ஆடி அமவாசை விரதம் குறித்துக் கேட்ட போது —

ஆடி அமாவாசை புதன்கிழமை கூடுவதால் அன்றைய தினம் விரதம் அனுஷ்டிக்கலாம். கிரகணம் உள்ளதால் மறுநாளும் அனுஷ்டிக்கலாம். இரகுநாதையரின் பஞ்சாங்கத்திலும் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் எமது ஆலயத் தீர்த்த நிகழ்வு நிர்ணயிக்கப்பட்டவாறு புதன்கிழமை இடம்பெறும். அன்றையதினம் வேற்பெருமான் திருமுறை பஜனைகளோடு கீரிமலை கண்டகி சமுத்திர தீர்த்த வைபவத்திற்காக எழுந்தருளுவார்—என்று சொன்னார்.

சர்வதேச இந்துமத குருபீட அமைப்பாளர் கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சாரியார் கொழும்பிலிருந்து விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், வியாழக்கிழமையே ஆடி அமாவாசை விரதத்தை அனுஷ்டிப்பதோடு பிதிர்த் தர்ப்பணமும் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(அ)

## சன சமூக நிலையத்தை ஒப்படைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.8

அரியாலை சனசமூக நிலையத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன. எனினும் இந்த சனசமூக நிலையக் கட்டடத்தில் படையினர் தொடர்ந்து நிலை கொண்டுள்ளனர். பொன் விழாவுக்கு முன்பாக அங்கிருந்து படையினரை அகற்றி கட்டடங்களை மீள ஒப்படைக்குமாறு மீண்டும் கோருவதற்கு சங்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது

இந்தக் கட்டடத்தை மீளப் பெறுவதற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக பல தடவைகள் பல வழிகளில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் அவை பலனளிக்கவில்லை என்று சங்க நிர்வாகம் கவலை தெரிவித்துள்ளது.

இச் சனசமூக நிலையத்தில் முன்பு இயங்கிய முன்பள்ளி நடன, சங்கீத வகுப்புகள், படிப்பகம், நூலகம், நூல் இரவல் வழங்கும் பகுதி, உள்ளரங்க விளையாட்டு, வெளி அரங்க விளையாட்டுகளுக்கான மைதானம் மற்றும் பிரத்தியேக கல்விச் சேவை என்பன கடந்த 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் செயற்படாமல் உள்ளன.

சனசமூக நிலைபக் கட்டடம் மீள ஒப்படைக்கப்படாத விடத்து அது தற்சமயம் தற்காலிகமாக இயங்கி வரும் இடத்தில் பொன்விழாக் கொண்டாட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

## மேலதிக நேர கொடுப்பனவு கிடைக்கவில்லை

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணியாற்றும் சகலதர ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மாதாந்த வேதனத்துடன் வழங்கப்படுகின்றபோதிலும் கடந்த மூன்று மாதங்களாக மேலதிக நேரக் கொடுப்பனவுகள் எதுவும் போடப்படாத நிலையில் மாதாந்த வேதனம் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைகளில் கடமையாற்றும் டாக்டர்கள், மருத்துவ தாதிகள், மருந்தாளர்கள், குடும்பநலசேவையாளர்கள், மேற்பார்வையாளர்கள், அம்புலன்ஸ் சாரதிகள், பரிசாரகர்கள் உட்பட அனைத்துத்தர ஊழியர்களுக்கும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது

(ஐ-117)

## திருட்டுக்கள் அதிகரிப்பு

உடுவில், சுன்னாகம், மயிலணி போன்ற இடங்களில் அண்மைக்காலங்களில் இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

ஊரடங்குச் சட்டத்தைச் சாதகமாக்கிக்கொண்டு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள ஒரு வீட்டிலும், மயிலணியில் உள்ள ஒரு வீட்டிலும் கடந்த திங்கட்கிழமை இரவு திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு சுமார் ஓர் இலட்சம் ரூபா பெறுமதியுடைய பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

அப்புத்துரை விமலச்சந்திரன் என்பவருடைய வீட்டிலிருந்து குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, மோட்டார் இயந்திரம், றேடியோ, பெரிய கிடாரங்கள், புடைவைகள் என பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

(ஐ-152)

## அ. அ. விநியோகம்

குருநகர் கிழக்கு ஜே/70 கிராமசேவை அலுவலர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 00 மணியளவில் குருநகர் இராணுவ முகாம் அலுவலகத்தில் வழங்கப்படுமென அப் பகுதிகிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி)

# ஆன்மீக விடுதலை இன்றி அரசியல் விடுதலை கிடைக்காது

விளைநிலங்களும், விளையாட்டு மைதானங்களும் பிணக்குழிகளாக மாறிவிட்டன அன்று இயேசுவைச் சிலுவையில் அறைந்த இடத்திற்குத்தான் ''மண்டையோடு'' என்று பெயரிட்டிருந்தார்கள். ஆனால் இன்று எல்லா இடங்களுக்கும் மண்டையோடு என்றே பெயரிட்டு விட்டார்களோ?

முடிவில்லையா தேவா? முடிவில்லையா? விடிவில்லையா? என்று வீங்கிய விழிகளுடன் விம்மியழுகின்ற மானிடர் வாசம் செய்யும் மயான பூமிதான் இன்று நாம் வாழும் சூழல் மரணங்களும், படுகொலைகளும், ஆட்கடத்தல்களும் மலிந்துவிட்ட எம்மண்ணில் விடிவெள்ளி எப்போது தோன்றும்? இந்த மரண ஓலங்கள் எப்போது ஓயும்? என்று வழிமேல் விழி வைத்து தூக்கமின்றி துயரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் எம் உடன் பிறப்புக்கள்.

இத்தனைக்கும் மத்தியில் இன்று நாம் வேண்டி நிற்பது விடுதலை. அதுவும் ஆன்மீக விடுதலை. ஆன்மீக விடுதலையின்றி அரசியல் விடுதலை கிடைக்காது, பெறவும் முடியாது. ஆன்மீகவிடுதலைக்காகவும் அரசியல் விடுதலைக்காகவும் இன்று மக்கள் உலகின் பல்வேறு திசைகளிலுமிருந்து குரல் கொடுத்த வண்ணம் உள்ளார்கள்

இனம்- மதம், உயர்ந்தவன்- தாழ்ந்தவன், ஏழை-பணக்காரன், முதலாளி- தொழிலாளி போன்ற வர்க்க வேறுபாடுகள் அனைத்தும் களையப்பட்டு அன்று கிறிஸ்து தனது உயிர்ப்பின் மூலம் அனைவருக்கும் அளித்த விடுதலை வாழ்வு எல்லோர் மட்டிலும் சமம் என்ற மன

### ஞாயிறு நற்பிரசாதம்

நிலையுடன் நாம் வாழ முற்பட வேண்டும். அப்போது நாளும் நாம் சந்திக்கும் தீமைகள் அகன்றொழியும். அன்று தான் உண்மை விடுதலை உதயமாகும்.

அன்று எகிப்திய தேசத்தில் அடிமை வாழ்வு வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் தம்இழி நிலை உணர்ந்து மனம் வருந்தி ஆண்டவனை நோக்கி ''ஆண்டவரே எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும் எங்கள் அவமானத்தைக் கவனித்துப் பாரும்! எங்கள் உரிமைச் சொத்து அந்நியர் கைவசம் ஆயிற்று; வீடுகள் வேற்று நாட்டினர் கைக்கு மாறிற்று. நாங்கள் தந்தையற்ற அநாதைகள் ஆயினோம்! எங்கள் அன்னையர் கைப் பெண்கள் ஆயினர்! நாங்கள் தண்ணீரைவிலைக்கு வாங்கிக் குடிக்கிறோம்! விறகையும் பணம் கொடுத்தே வாங்குகிறோம்! கழுத்தில் நுகத்தோடு விரட்டப்படுகிறோம்! சோர்ந்துபோனோம் எங்களுக்கு ஓய்வேயில்லை. (புல. ஆகம். 5:1-5) என்று அபயக் குரல் எழுப்பி விடுதலை வேண்டி நின்றார்கள்.

அவ்வேளை ஆண்டவன் அவர்கள் நிலை கண்டு தம் அடியாள் மோசேசை அனுப்பி

அருட் சகோதரர்
செ. வசந்தகுமார்

அவர்களுக்கு விடுதலை அளித்து வாக்களிக்கப்பட்ட பாலும், தேனும் பொழியும் கானான் நாட்டுக்குப் பாலைவனம் ஊடாக வழி நடத்திச் சென்றார்.

அன்று இஸ்ராயேலரை வழி நடத்திக் காத்த இறைவன இன்றும் நாம் வாழுகின்ற போர்ச்சூழலிலே அனுதினமும் அணுவணுவாய் இறந்து கொண்டிருக்கும் எம் மக்களின் அபயக் குரல் கேட்டு விடுதலை அளிக்க நிச்சயம் வருவார். அவர் தரும் விடுதலை முழு மனித குலத்திற்கும் பொதுவானதொரு விடுதலை நிரந்தரமான, நிம்மதியான, உறுதியான விடுதலை.

★

### நாளை

ஆடி 24

திங்கட்கிழமை

திதி: திரயோதசி

முன் இரவு 8 57 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

காலை 6.37 வரை.

புனர்பூசம்
பின்னிரவு 5.23 வரை
பிரதோஷ விரதம்

சுபநேரம்: 12.04 1.34

ராகுகாலம்: 7 34 9 04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பிறர் குற்றங்களை கவனிக்காதே. நீ எந்தவிதக் குற்றமும் செய்யாமல் நடந்து கொள்.

[illegible]

## கலாசார உத்தியோகத்தருக்கு மூன்று வாரகாலப் பயிற்சி

யாழ். மாவட்டத்தின் சகல கல்வி வலயங்களிலும் கலாசார உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு அவர்களது பணிகள் தொடர்பாக மூன்று வாரகாலப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

குடாநாட்டில் உள்ள தீவகம். யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய ஐந்து கல்வி வலயங்களுக்குமாக கடந்த மாதம் முதல் 15 பட்டதாரிகள் கலாசார உத்தியோகத்தர்களாக மாகாணக் கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கே மாகாணக் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களாலும், யாழ். மாவட்டத்தில் உள்ள சமயத் தலைவர்களினாலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களினாலும் 'கலாசார விழுமியங்கள்' குறித்துப் பயிற்சி வழங்கப்படும் என மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ-7-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில்தாக்குதல்கள் அதிகரிப்பு

# மோசமடையும் பாதுகாப்பு நிலைவரம்

வவுனியாவின் பாதுகாப்பு என்பது இப்போது படு பாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே அவ்வப்போது துப்பாக்கிச்சூடுகள், கிரனேட் வீச்சுக்கள் மற்றும் கிளைமோர் தாக்குதல்கள் என்பன முன்னரும் நடைபெற்று வந்தன தான். ஆயினும் வவுனியா நகரமானது படையினரின் கையில் வந்தபின் அண்மையில் அடுத்தடுத்து நடந்து வரும் சம்பவங்கள் படையினரை நிலை தடுமாற வைத்துள்ளன.

1990 ஆம் ஆண்டு பலத்த போராட்டத்தின் பின் வவுனியா நகரப் பகுதி புலிகளிடமிருந்து மீட்கப்பட்டது. அதன் பின் வவுனியா நகரை அண்மித்து நடந்த பாரிய தாக்குதல் தாண்டிக்குளம் மீது புலிகள்தொடுத்த தாக்குதலாகும். அதாவது தாண்டிக்குளப்பகுதி வரை நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 'ஜெயசிகுறு' என்ற பெயரில் கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் வரை செல்லத் திட்டமிட்டு வடக்காக முன்னேறினர். ஓமந்தைவரைஎந்த எதிர்ப்புமின்றி முன்னேறி நிலைகொண்டனர். அப்போது மேற்குப் புறத்திலிருந்து நொச்சி மோட்டைப் பாலத்தைத் தகர்த்து விட்டு புலிகள் தாண்டிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வைத்திய சாலையைத் தாக்கி அழித்தனர். நூற்றுக்கணக்கான படையினர் பலியாகினர். பல இலட்சம் பெறுமதியான ஆயுதங்கள் மருந்துப் பொருள்கள் அம்புலன்ஸ் வண்டிகள் உட்பட பல வாகனங்களையும் புலிகள் அள்ளிச் சென்றனர். இது அப்போது புலிகளுக்கும்—இராணுவத்துக்கும் எல்லையாக இருந்த பகுதியில் நடந்த மோதலாக இருந்ததால் அவ்வளவாகப் பெரிது படுத்தப்படவில்லை.

ஆனால் தற்போதைய நிலைமைவேறு. வவுனியாவின் நகரப் பகுதிக்குள் நுழையும் ஒவ்வொருவரும் தீவிரமாகச் சோதிக்கப்பட்டே அனுப்பப் படுகிறார்கள் திருகோணமலை வீதியால் கிழக்குப்புறமாக வவுனியாவுக்குள் வருவோர் கோவில்குளம் சந்திரியிலும்–

தென்பகுதியிலிருந்து கண்டி வீதியால் வருவோர் ஈரப் பெரிய குளத்திலும்—

ரயில் மூலம் வருவோர் ரயில்வே நிலையத்திலும்—

மன்னார்வீதியால் மேற்குப் புறத்திலிருந்து வருவோர் வேப்பங்குளம், பூவரசங்குளம் ஆகிய இடங்களிலும்—

தீவிரமாக சோதனையிடப் பட்ட பின்பே வவுனியாவுக்குள் வர அனுமதிக்கப்படுகின்றனர்.

வவுனியாவில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் அவர் சிங்களவரானாலென்ன, முஸ்லிமானாலென்ன, தமிழரானாலென்ன நிரந்தரப் பாஸ், மூன்று மாதப் பாஸ், ஒரு மாதம், 14நாள், ஒருகிழமை, 3 நாள், ஒரு நாள் என்று வதிவிட அனுமதிப் பாஸ்கள் வழங்கப்பட்டு, அவைகள் தெருவுக்குத் தெரு சோதனை செய்யப்பட்டு, கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம்ஆங்காங்கே இராணுவக் காவலரண்களை அமைத்துக் காவல் பார்த்துக் கொண்டிருக்க அவர்கள் கண்களிலெல்லாம் மண்ணைத் தூவிவிட்டு நகருக்குள் நுழைந்து தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டுப் புலிகள் தப்பிச் செல்வதானது பாதுகாப்புத் தரப்புக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவிடுகிறது.

அதாவது புலிகள் சாதுரியமாக வந்து தாக்கிவிட்டுப் போக — அவர்களை விட்டுவிட்டு சாதாரண மக்களைப் பாஸ் என்றும் பரிசோதனை என்றும் போட்டு வருத்தி வாட்டுவது ஏன்? என்று பொதுமக்கள் தரப்பில் கேள்வியையும் எழ வைத்துள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி கண்டி வீதியிலுள்ள உயர் பாதுகாப்புப் பிரதேசமாகியபொலீஸ்அதிகாரிகளின் குடியிருப்புப் பகுதிகளை அண்டிய இடத்துக்கு ஒட்டோவில் வந்த இருவர் தாம் எடுத்து வந்த றைபிள்களால் சரமாரியாகச் சுட்டுவிட்டுச் சாதுரியமாகத் தப்பிச் சென்றனர். இதில் படையினர், பொதுமக்கள், பெரும்பான்மை இனத்தவர்கள் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர். இவ்வளவு பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் றைபிள்களுடன் வந்து சுட்டுவிட்டுப்போனது அச்சமயம் பலரையும் ஆச்சரியப்பட வைத்தது.

அடுத்து கடந்த 4 ஆம் திகதி மன்னாரை நோக்கிச் சென்ற விசேட அதிரடிப்படையினரின் டிரக்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் 14 பேர் பலியாகி 22 பேர் காயமடைந்தனர். அது ஒரு கரும்புலித் தாக்குதல் என்று முதலில் சொல்லப்பட்டது. ஆயினும் தற்கொலைப் போராளி என்று படையினரால் ஒப்படைக்கப்பட்ட சடலம் தலை நரைத்த ஒரு வயோதிப மாதுவினுடையதாகவே காணப்பட்டது. வீட்டுத் தேவைக்காகத் தேங்காய் எண்ணெய் வாங்கச் சென்ற தனலட்சுமி என்ற 60 வயதான பெண்ணின் சடலமே அது என்றுசொல்லப்பட்டது. அவர் கரும்புலியாக இருக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வலம்

-ரா.இளவரசன்-

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# இந்து நாகரிகத்துறை அமைவதற்கு

# முன்னோடி பேராசிரியர் சதாசிவமே

பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அமரத்துவம் அடைந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகின்றது. கொழும்புப் பல்கலைக் கழகம் முன்னர் கொழும்பு வளாகமாக இருந்த போது பேராசிரியர் சதாசிவம் கொழும்பு வளாகத் தமிழ்த் துறைத் தலைவராக நீண்ட காலம் கடமையாற்றிய பின்னர் மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பொறுப்பேற்று 1988 இல் அமரத்துவம் அடையும் வரை அதன் தலைவராகவும் விளங்கினார்.

பல்கலைக்கழகம் புகு முன்னரே மதுரை தமிழ்ச் சங்கப் பண்டிதராகியவர். அப்பயிற்சி காரணமாக பேராசிரியர் அவர்களிடம் ஒரு தனி ஆளுமைத் திறனும் ஏற்பட்டிருந்தது சமய இலக்கியங்களிலும் புராதனமான இந்துப் பண்பாட்டு மரபிலும் ஆழமான விசுவாசமும் பரிபூரண நம்பிக்கையுமுடையவராக இருந்தார்.

1952 இல்பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்தவர் சுமார் 36 வருடங்கள் 1988 இல் அமரத்துவமடையும்வரை ஓயாது உழைத்து வாழ்ந்த பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார்.

கொழும்பு வளாகத்திலே அவரிடம் இந்து நாகரிகம் சிறப்புக் கலை பயின்ற முதல் மூன்று மாணவர்களில் நானும் ஒருவர் என்பதில் பெருமையடைகிறேன். புதிய பாடத்துறை — இந்துநாகரிகம் — அப்போது கூடப் பயின்ற சக மாணவர்களின் கேலிக்கும், நையாண்டிக்கும் மத்தியில் எம்மை நிலை தளராது, உறுதி குலையாது, திட நம்பிக்கையுடன் ''உங்கள் அனைவருக்கும் சிறப்பான எதிர்காலம் உண்டு. இன்று கேலி செய்வோரே நாளை உங்கள் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி அடைவர், பெருமைப்படுவர்'' என அன்று பேராசிரியர் சொன்ன வாக்கு தெய்வ வாக்காக இன்று பல்கலைக்கழகப் பணியில் எம்மைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்துள்ளது.

''பௌத்த நாகரிகம்'' என்று ஒரு பாடம் பல்கலைக் கழகத்திலே இடம் பெற்றிருப்பதனை அவதானித்து உணர்ந்த பேராசிரியர் சதாசிவம் அவ்வாறே தமிழர் பண்பாடு, இந்துக்கள் கலை, கலாசாரத்தின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் பேண வேண்டிய அவசியத்தினை உணர்ந்தார்.

''இந்துநாகரிகம்'' என்னும் ஒரு துறையை பல்கலைக்கழகத்தில் உருவாக்க வேண்டும் என்ற கரிசனையினால் முன்னாள் உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் மூலமும் இலங்கை அரசியல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னாள் பேராசிரியர்கள், செல்வநாயகம், பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் என்போர் இதற்கான பாடநெறியினைத் தயாரித்து முதலில் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றனர்.

ஆனால் அந்தப் பாடநெறியினைத் துணிந்து முன்னெடுத்து கொழும்புப் பல்கலைக்கழகத்திலே முதன் முதல் 1968 ஆம் ஆண்டிலே செயற்படுத்திய செயல்வீரர் பேராசிரியர் சதாசிவமே ஆவார். அவர்களை அவரது முதன் இந்துநாகரிகத்துறை மாணவர்கள் என்ற வகையில் நாம் என்றும் மறந்து விடமுடியாது....

பேராசிரியர் தமது பல்கலைக் கழக வாழ்விலே தமிழ் இலக்கியம், இலக்கணம், இந்து நாகரிகம், மொழியியல் முதலான துறைகளை மிகுந்த கரிசனையுடனும் அர்ப்பணிப்புடனும் பயிற்றுவித்து வந்தார். இந்த நிலையிலே தான் கொழும்பு பல்கலைக் கழகத்திலே பேராசிரியராக விளங்கிய காலத்திலே 'இந்து நரகரிகம்' என்னும் பாடநெறிக்குத் தனியானதொரு துறை அமைவது அவசியம் என்பதனைப் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு ஆலோசனைகள் வழங்கி, அப்படி ஒரு நெறியைத் தனித்துறையாக உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொண்டார்.

அவரது பதவிக் காலத்தில் அது நிறைவேறாவிட்டாலும் களனிப்பல்கலைக்கழகத்திலே தமிழ் - இந்துப் பண்பாட்டுத் துறையாக அது மலர்ந்தது.

சதாசிவம் அவர்களது பெரும் முயற்சியானது– பேராசிரியர் க. கைலாசபதி அவர்களது தளராத ஊக்கத்தினாலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 'இந்து நாகரிகத்துறை' என்னும் பெயரில் தனித்துறையாக தாபிக்கப்பட்டு வளர்ச்சியுற்றது. இன்று இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளி விழாக் காணும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரிகத்துறையும் தனது 25 ஆண்டுகளைவெற்றிகரமாகப் பூர்த்தி செய்துவெள்ளிவிழாக் காண்கின்றது என்பதனை [illegible] கூறுகின்றோம். ★

**திருமதி கலைவாணி இராமநாதன்**

**(யாழ். பல்கலைக்கழகம்)**

# சிங்கப்பூரில் தமிழும் தமிழரும்

சிங்கப்பூரில் அரசு மொழிகளில் தமிழும் ஒன்று 1959 ஆம் ஆண்டு முதல் இச்சிறப்பு தமிழுக்கு கிடைத்துள்ளது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழ் மொழி கற்கும் வாய்ப்பை இவ்வருடம் தொடங்கியுள்ளது.

சிங்கப்பூரில் வாழும் இந்தியரில் தமிழ்மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களே பெரும்பான்மை இந்திய சிங்கப்பூரர். இவர்களில் நூற்றுக்கு அறுபத்து நான்குபேர் தமிழ் பேசுவோர் ஆவர். இலங்கையைச் சேர்ந்த தமிழர்களும் இங்கு பல ஆண்டுகளாக வாழ்கிறார்கள்.

இங்கு தமிழ்க்கல்வி பாலர் பள்ளியிலிருந்து, தொடக்க கல்லூரிகள் வரை சென்ற ஆண்டு 18.000 மாணவர்கள் தமிழ் படித்தனர் தமிழாசிரியராகப் பணியாற்ற விரும்புவோர் 'நன்யாங்' தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் தேசியக் கல்விக் கழகத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

சிங்கப்பூரில் தமிழ் பேசுவோர் தீவின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கிறார்கள் மொத்தம் 200 தொடக்கப் பள்ளிகளில் 155 பள்ளிகளில் பயிலும் தமிழ் மாணவர்கள் அருகில் உள்ள தமிழ் நிலையங்களுக்கும் சென்று தமிழினைப் பயில்கின்றார்கள். மொத்தம் 550 தமிழாசிரியர்களில் தொண்ணூறு பேர் சமீப ஆண்டுகளில் தமிழகத்திலிருந்து வந்தவர்கள் ஆவர்.

## தகவல் மேடை

வானொலி தொலைக்காட்சி தமிழ் நாளிதழ், என்பன தமிழையும் இந்தியப் பண்பாட்டையும் போற்றி வளர்க்கும் அமைப்புகளாகத் திகழ்கின்றன. அரசாங்கத்தின் உதவியுடனும், நிறுவனங்களின் நிதிக் கொடையுடனும் தேசிய கலைகள் மன்றம் இந்திய நுண்கலைகளை விளக்கவும் அவற்றைப் பரப்பவும் துணை செய்கின்றது. தமிழ் இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்கம் அழிக்கிறது.

தாய் மொழியையும், பண்பாட்டின் சிறப்பியல்புகளையும் போற்றிப் பேணுவதென்ற உறுதியான அரசுக் கொள்கையால் தமிழ் பெரிதும் பயனடைந்திருக்கிறது. சிங்கப்பூரில் இப்போது இருக்கும் அளவில் தமிழ் பேசவும் எழுதவும் தெரிந்தவர்கள் முன்பு எப்போதும் இருந்ததில்லை.

பல்வேறு இனத்தவரும் தத்தம் தாய் மொழிகளையும், பண்பாடுகளையும், விழாக்களையும் கொண்டாடி வளர்க்கும் அதே நேரத்தில் ஒரு குலமாய் சமயஇன நல்லிணக்கத் தோடு சிங்கப்பூரில் வாழ முடிகிறது.

அரசின் கொள்கையடிப்படையில் இன பேத வேறுபாடு இல்லை. சிறுபான்மை மக்கள் என்று சிறுமையுற்று வாழும் நிலை இல்லை. இதற்குக் காரணம் திறமையின் அடிப்படையில் மட்டுமே அரசாங்க அலுவலகங்களில் ஒருவர் இடம் பிடிக்க முடியும். திறமைக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை, சிங்கப்பூர் மக்கள் தம் திறமைகளை வளர்க்க உதவியது. இனப் பொறாமையைத் தலையெடுக்காமல் செய்து விட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டின் கடைசிச் சூரியகிரகணம்

# ஆடி அமாவாசையன்று நிகழுகின்றது

## அபூர்வ நிகழ்வுகளை ஆராய்வதற்காக விஞ்ஞானிகள் காத்திருக்கின்றனர்

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பண்டைத் தமிழர் சோதிடக் கலையில் பாண்டித்தியம் மிக்கவராகத் திகழ்ந்ததனால் சுபநேரங்களில் எல்லாக் கருமங்களையும் ஆரம்பித்து அதிக நற்பலன்களைப் பெற்றனர். சோதிடக் கலையை ஆதாரமாகக்கொண்டு கருமங்களைச் செய்த இராசராசசோழன் சுபநேரங்களில் பிற தேசங்களைத் தாக்கி அவற்றை வென்றான். இதனால் ஈழமும் சில தென்கிழக்கு நாடுகளும் அவன் ஆட்சியில் இருந்தன. சோதிடக்கலையையும் சிற்பக்கலையையும் ஆராய்ந்தறிந்து தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்தான். இந்தியாவிலுள்ள பெரிய இந்து ஆலயங்களில் சோதிடக்கலையின் சிறப்புகள் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் தெற்றெனத் தெரிகின்றன.

சூரிய குடும்பத்தில் சூரியன் நடுவில் சுழன்றுகொண்டு செல்ல புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ என்ற கோள்கள் சூரியனை வெவ்வேறு நீள் வட்டப் பாதைகளில் சுற்றி வருகின்றன. இவற்றில் சூரியனுக்குத்தான் அபூர்வ ஒளி உண்டு. மற்றைய கோள்களுக்கு ஒளியில்லை. ஆனால் சூரியனின் ஒளியைக் கிரகித்து பின்னர் ஒளித்தெறிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தக் கோள்கள் சூரியனின் ஒளியைக் கிரகிப்பதால் இவைகளுக்குக் கிரகங்கள் என்ற காரணப்பெயர் தமிழில் உண்டு.

சோதிடம் சரியா? பிழையா? என்பதைக் கிரகணங்கள் தோன்றும் நேரங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். இது பண்டைய ரிஷிகளின் வாக்காகவும் இருக்கின்றது. பூமியும் மற்றைய கிரகங்களும் தத்தம் பாதைகளில் சுற்றிச் சுற்றி வரும் பொழுது பூமியிலுள்ளோருக்குச் சில நிலைகளில், ஒரு குறிப்பிட்ட கிரகம் மற்றக் கிரகத்தினால் மறைக்கப்படுகின்றது. அப்பொழுது அதைக்கிரகணம் என்கின்றோம். ஆனால் பூமிக்குப் பகலில் வெளிச்சத்தைக் கொடுக்கும் சூரியனும், இரவில் வெளிச்சத்தைக் கொடுக்கும் சந்திரனும் முறையே சந்திரனாலும் பூமியாலும் மறைக்கப்படும் பொழுது சூரிய கிரகணமும் சந்திர கிரகணமும் தோன்றுகின்றன.

### சூரிய கிரகணம்

அமாவாசை காலத்தில் சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வரும் பொழுது பூமியிலுள்ளவர்களுக்குச் சூரியன் முழுமையாகவோ அல்லது அதன் பகுதியோ தெரியாமற் போவதை முறையே பூரண சூரிய கிரகணம் என்றும் பார்சுவ சூரிய கிரகணம் என்றும் கூறுகின்றோம். ஆனால் சூரியனின் நடுப்பகுதி மட்டும் மறைக்கப்பட்டு, ஓரங்கள் வட்டமாகத் தெரிந்தால் அதைக் கங்கண சூரிய கிரகணம் என்றும் செப்புகின்றோம்.

இக்கிரகங்கள் அண்டவெளியில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எங்கெங்கு நிற்கின்றன என்பதை வான சாஸ்திரத்தினால் அறிய முடியும், அதன்படி சூரிய கிரகணம் இந்த இரண்டாவது ஆயிரமாம் ஆண்டில் இறுதியாக 11-8-99 இல் நிகழ இருக்கின்றது என ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது.

### சூரிய கிரகணம் தோன்றும் விதம்

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் இருக்கும் தூரத்தை விட 380 மடங்கு தொலைவில் சூரியன் உள்ளது. எனவே சந்திரனினால் இதைவிட 380 மடங்கு பெரிய ஒளி மண்டலத்தை அத்தூரத்தில் இல்லாததுபோல் மறைக்க

சுண்டுக்குளி க. யோகராசா
(வானசாஸ்திரி — சோதிடர்)

முடியும். எனவே இச்சந்திரனினால் 380 மடங்கு பெரியதோர் ஒளிமண்டலத்தை அவ்விரு பொருள்களின் (சந்திரனும் ஒளி மண்டலமும்) மையப் புள்ளிகளுக்கூடாகச் சென்று பூமியில் படியும் நிலத்திலுள்ளவர்களுக்குத் தெரியாமல் மறைக்க முடியும்.

இந்நிலையில் ஒளிமண்டலமான சூரியனின் நடுப்பகுதி (380 பாகம்) பூரண சூரிய கிரகணம் போன்றும், சூரியனின் ஓரங்களான 20 பகுதி வட்டகோடாகவுந் தென்படும். இதையே கங்கண சூரிய கிரகணம் என்கிறோம்.

### யாழ்ப்பாணத்தில்

இத் தோற்றங்கள் ஆகக் கூடிய சூரியனின் தொலைவையும் சந்திரனின் தொலைவையும் கூடிய சந்திரனின் விட்டத்தையும் கொண்டு கணிக்கும் பொழுது தோன்றுபவையாகும். இத் தூரங்கள் மாறுபடும் நிலைகளில் ஒரு சந்திரனினால் 380 பகுதிகளை மறைத்து பூரண சூரிய கிரகணங்களைத் தோற்றுவிக்க முடியும்.

பூமியில் பூரண சூரிய கிரகணம் தோன்றும் நடுக்கோட்டிலிருந்து 1,790 கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் கிரகணத் தோற்றம் படிப்படியாகக் குறைந்து கொண்டே சென்று பார்சுவ சூரிய கிரகணம் தோன்றும். அதன்படி யாழ்ப்பாணத்தில் பார்சுவ சூரியகிரகணமே தோன்றும். பூரண சூரியகிரகணம் அத்திலாந்திச் சமுத்திரத்தின் நடுப்பகுதியில் ஆரம்பித்து ஐரோப்பாவின் கீழ்ப்பகுதியிற் செசல்ஸ் தீபகற்பத்தைக் கடந்து செல்லும்.

யாழ்ப்பாணத்தில் பார்சுவ சூரியகிரகணம் மாலை 5 மணி 20 நிமிடம் (பழைய நேரம்) ஆரம்பித்து 6 மணி 4 நிமிடத்தில் அதிகமாக மறைத்து பின் குறைந்து கொண்டே செல்லும். சூரியன் 6 மணி 28 நிமிடம் மறைவதால் கிரகணம் அப்படியே இருட்டில் மறைந்து விடும். சோதிடத்தின்படி புனர்பூசம் நாலாம் கால், பூசம், ஆயிலியம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், ரேவதி கிரகண

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# கிழக்குப்பாதுகாப்பு மீது அரசுத்தரப்பு கவனம்

தமிழினத்தின் வரலாற்றில் கறைபடிந்த மாதம் ஆடி மாதம். ஆடிக்கலவரங்கள் விளைவித்து விட்ட அனர்த்தங்கள் தமிழர் சமுதாயத்தையே உலுக்கி எடுத்து விட்டன. 16 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் கூட காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தக் காலகட்டத்தின் சாயல்கள் இன்றும் நம்மைத்தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

மனித உரிமை மீறல்கள் தடுப்புக் காவல்கள் இவை தொடர்பான சித்திரவதைகள் என்பனவற்றால் நமது இளைய தலைமுறையினர் இன்றும் கூட சிறைக் கூடங்களிலே வாடிவதங்கிக்கொண்டிருக்கின்றனர். தடுப்பு முகாம், சிறைக்கூடம், நீதிமன்றம் என எங்கள் இளைய தலைமுறையினரின் வாழ்வு அல்லாடிக்கொண்டிருக்கின்றது.

உலக நாடுகளைப் பொறுத்தவரை தங்கமும், டொலரும், யூரோ நாணயமும் பெறுமதி மிக்க விடயங்களாக கணிக்கப்படுகின்றன. நமது நாட்டின் பெறுமதி மிக்க ஆவணமாக இன்று தேசிய அடையாள அட்டைகளே திகழ்கின்றன. ஒரு காலத்தில் பணநோட்டுகளை பைகளில் கவனமாகப் பாதுகாத்த மனிதர்கள் இன்று பணத்திலும் பார்க்க பெறுமதிமிக்கதாக தேசிய அடையாள அட்டைகளை பேணிக்காக்க ஆரம்பித்து விட்டனர். பஸ் வண்டிகளிலும் போக்குவரத்து வாகனங்களிலும் பயணம் செய்யும் ஒரே நாட்டில் வாழும் பல்லின சமுதாய மக்கள் பிரித்தாளப்படும் விதமும் அவர்கள் நடத்தப்படும் விதமும் தமிழ் மக்கள் தாங்களும் இந்த நாட்டுப் பிரசைகள் தானா என எண்ணி ஏக்கப் பெருமூச்சினை விட வைக்கும் நிலைகளை சோதனை என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தமிழ் மக்களைவேதனையான நிலைக்குக் கொண்டு வந்துள்ளன.

கிழக்கிலங்கையும் யுத்தகளமாக மாறிக் கொண்டிருக்கும் நிலையில் கிழக்கில் அரசு பாரிய யுத்த நடவடிக்கையினை மேற்கொள்ளப் போகின்றதா என்ற சந்தேகம் உருவாகி உள்ளது. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் கிழக்கிலங்கைக்கான விஜயமும் இதனையே புலப்படுத்துவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## திருமலைத் திருமுகம்

-சங்கீத்-

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தினைப் பொறுத்தவரை கடந்த மாதம் 25 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்படும் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட 'நியூக்கோ எண்டியூரன்ஸ்' என்ற சிறிய கப்பல் குண்டுவைப்பிற்கு இலக்கானதைத் தொடர்ந்து கடலில்மூழ்கி உள்ளது. நியூக்கோ எண்டியூரன்ஸ் என்ற இந்த சிறிய கப்பல் கடந்த ஒருவருட காலத்திற்கு முன்னர் திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்குமான பயணிகள் சேவையினை மேற்கொண்டிருந்தது. இதனைத் தொடர்ந்து திருகோணமலைக்கும் மூதூருக்குமான கடல் பயணசேவையினை மேற்கொண்டிருந்தது.

இந்தக் கப்பல் திருகோணமலை உட்துறைமுக வீதியை உள்ளடக்கியதான துறைமுக அதிகார சபையின் இறங்குதுறையில் தரித்து நிறுத்தப்பட்டிருந்தது. இந்த இறங்குதுறையுடன் இணைந்தே திருகோணமலை துறைமுக பொலீஸ் நிலையம், சுங்கத்திணைக்கள பணிமனை என்பனவும் அமைந்துள்ளன. இவ்வாறு அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் தரித்து வைக்கப்பட்டிருந்த இந்தக் கப்பல்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி கடலில் மூழ்கியுள்ளது, இதனைத் தொடர்ந்து மூதூரிலும் குச்சவெளிப் பகுதியிலும் இடம்பெற்ற தாக்குதல்களும் பாதுகாப்பு வட்டாரங்களைப் பெரிதும் சிந்திக்க வைத்து விட்டன.

இதே போன்று மட்டக்களப்பு நகரில் அடுத்தடுத்து இடம்பெற்று வரும் சைக்கிள் குண்டு வெடிப்புகளும் தாக்குதல்களும் கிழக்கிலங்கையிலும் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகள் தமது தடங்களை ஆழமாகப் பதித்துள்ளனரோ என்ற சந்தேகத்தினைப் படை வட்டாரங்களில் உருவாக்கி உள்ளது,

இதனைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களாகவே கிழக்கிலங்கையில் படையினரின் கவனம் நடவடிக்கைகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி...

- இடியன் -

- சந்திர மண்டலத்தில் நீர் இருக்கின்றதா இல்லையா என்பதைப் பற்றி ஆராய்ச்சி நடைபெறுகின்றதாம்!
  ★ தண் (ணீர்) நிலாவா தண்ணீர் நி(ல்) லாவா என்பதைப் பற்றிய ஆராய்ச்சி!
- மதுரைத் தொகுதியில் தனித்துப் போட்டியிடப் போவதாகச் சுப்பிரமணியம் சுவாமி அறிவித்துள்ளார்.
  ★ தனித்து (ஒரு) வாக்கெடுத்து 'கின்னஸ்' சாதனை புரியவும் கூடும்!
- அமைச்சர்களோ ஆளுங்கட்சி எம். பிக்களோ இந்த ஆண்டு முடியும் வரை வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாதென ஜனாதிபதி தடைவிதித்துள்ளார்.
  ★ வாக்காளக் காக்கைகளிடமிருந்து வாக்கு வடைகளை விழுத்தும் முயற்சியில் இப்போதிருந்தே ஈடுபடாவிட்டால், தேர்தலின் பின், நிரந்தரமாகவே வெளிநாடுகளில் இருந்து ஊளையிடவேண்டிய நிலை ஏற்படும் என்ற அச்சந்தான் காரணமோ?
- குறிப்பிட்ட ஒரு பாதையால் தமது பகுதிக்கு வரமுயன்றவர்களை 'வரவேண்டாம்' எனப் புலிகள் எச்சரித்தனராம்!
  ★ அந்தப் பாதையால் நடந்தால் 'உபாதைகள்' ஏற்படலாம் என்பதற்கான எச்சரிக்கையோ?
- தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்களிடையே கைகலப்பு; ஒருவரின் கை துண்டிப்பு!
  ★ தொல்பெரும் இனத்தினரின் பண்பாட்டைச் சிதைக்கும் தொ(ல்) லைக் காட்சிகள் தொலையும் நாள் எந்நாளோ என ஏங்குகின்றார் ஒரு தமிழன்பர்!
- புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும் சாத்தியக் கூற்றை அரசாங்கம் இன்னமும் நிராகரிக்கவில்லை!
  ★ உள்ளத்தின் நிலையைச் சொற்களால் வெளிப்படுத்தவும் முடியும்; மூடி மறைக்கவும் முடியும்! வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கூற்று எந்த வகையானது என்பது அந்தக் கதிர்காமத்தானுக்குத்தான் 'வெளி'ச்சம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்

கொழும்புத்துறை, ஓக. 8

யாழ். சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் செல்வி சி. வாசுகி 1999 ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு மூன்றில் கட்டுரைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

இவர் சரசாலை இந்து மன்றம் நடத்திய பேச்சுப் போட்டியிலும் மத்திய பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைப் பாடசாலை அபிவிருத்திச் சபையும்,பாராட்டி பரிசில் வழங்கவுள்ளது. பாடசாலை ஆசிரியர்களும் பாராட்டி பரிசில்களை வழங்கினார்கள். [ஐ-30]

★ ★ ★ ★ ★

சாவகச்சேரி, ஓக. 8

சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய பிராந்திய பொறியியல் உதவியாளர் சபாரத்தினம் சற்குணசிங்கம் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 2 ஆம் திகதி யாழ். மாவட்ட பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சாவகச்சேரி தென்னிந்தியச் திருச்சபையின் செயலாளருமாவார். [ஐ-31[

★ ★ ★ ★ ★

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தில் ஆங்கிலத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்த டீ. ஆர். அருமைநாயகம் இம் மாதம் 4 ஆம் திகதி தமது 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்து சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார். [ஐ—51]

★ ★ ★ ★ ★

வேலணை, ஓக. 8

மாநகர சபையில் நீண்டகாலமாகச் சேவையாற்றிய தரம் I எழுதுவினைஞர் வி.செல்வநாயகம், தரம் I காசாளர் எஸ். சிவபாலன் ஆகியோர் அண்மையில் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளனர்.

வி. செல்வநாயகத்தின் பிரிவுபசார வைபவம் மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் கலந்து கொண்ட பலரும் அவரது சேவையினைப் பாராட்டி உரையாற்றினார்கள். [ஐ—167]

★ ★ ★ ★ ★

கோண்டாவில் சி. சி. த. கலவன் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய இ. சிவபாதசேகரம் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திருமதி த. சிவசுப்பிரமணியம் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வுபெற்று யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் கடமையேற்றுள்ளார். [ஐ—103]


## இந்துமத குருபீடாதிபதியின்
# 77-வது ஜெயந்தி தினம்



அமரத்துவமடைந்த இந்துமத குருபீடாதிபதி
''சிவாஹம கிரியா சிம்மம்'', ''மாந்திரீக பூஷணா''
கலாநிதி அருள்ஜோதி
சிவப்பிரம்மஸ்ரீ
**ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின்**
77-வது ஜெயந்தி தினமான
**ஆடித் திருவாதிரையான இன்று 8 - 8 - 99**
அன்னாரின் குலதெய்வம் நாயன்மார்கட்டு அருள்மிகு
ஸ்ரீதேவி ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில்
விசேட அபிஷேக பூஜைகள் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்னாரின் மருகர்
சிவப்பிரம்மஸ்ரீ
சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்
அமைப்பாளர்
சர்வதேச இந்துமத குருபீடம்,
யாழ். மாவட்டம்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.
(8848)


## வவுனியாவில் ......

[6 ஆம் பக்கத் தொடர்]

முடியாது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். ஆனால் சைக்கிள் கரியர் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு டிரக் வந்தபோது றிமோட் கொண்ட்ரோல் மூலம்இயக்கப்பட்டதாலேயே வெடிக்க வைக்கப்பட்டதாக மறுநாள் தெரிய வந்தது. அதற்கிடையில்அவசரப்பட்டு அப்பாவியான ஒருவயோதிப மாதுவைக் கரும்புலியாக்கியதில் படையினரின் பதற்றம் தெளிவாக விளங்கியது

அத்துடன் அடுத்தடுத்து நிகழும் மின்மாற்றித் தகர்ப்புகளும் — தகர்த்த மின்மாற்றிகள் மீள நிறுவப்படும்போது மீண்டும் தகர்க்கப்படுவது போன்ற சம்பவங்களும் ஒன்றைத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

அதாவது புலிகள் வவுனிய'ப் பகுதியில் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள் என்பதுதான் அது.

சரி இவ்வாறு ஊடுருவி இருக்கும் புலிகளுக்கு தாக்குதலுக்கான சந்தர்ப்பம் எவ்வாறு அமைகிறது என்றால் அது சர்வசாதாரணமாகவே கிடைக்கிறது எனலாம். ஏனென்றால் இவ்வளவு சம்பவங்கள், தாக்குதல்கள், இழப்புக்கள் என்பவற்றின் பின்னரும் படையினர் படு அசமந்தமாக இருப்பதே இதற்குக் காரணம் என வவுனியாப் பகுதி மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

சாதாரணமாக தெருவிலே சென்றி பார்த்துக் கொண்டிருப்பவர்கள் வீதியால் போவோரையும் வருவோரையும் கூப்பிட்டு சிகரட். சோடா, நுளம்புத்திரி என்பன வாங்கித் தரும்படி கேட்பதும் அப்படி வாங்கிக் கொடுத்தால் அவர் எந்த சோதனையுமின்றி அந்த தடைமுகாம் ஊடாகச் செல்ல அனுமதிக்கப்படுவது.

படையினர் தம்முடன் கடமையாற்றும் பெண் படையினருடனும், வீதியால் போய் வரும் பெண்களுடனும் அரட்டை அடித்தபடி சோதனை நடவடிக்கைகளை கோட்டை விடுவது —

டிரக்கில் அல்லது உழவு இயந்திரங்களில் பெரும் எண்ணிக்கையில் ஒன்றாகப் பயணம் செய்வது —

இது போன்ற அசிரத்தையான நடவடிக்கைகளை அவதானித்து வைத்தே புலிகள் இவ்வாறான தாக்குதல்களை சாதுரியமாக நடத்தி வருகின்றனர் என்றும் கருத இடமுண்டு.

முன்னர் என்றால் தமிழ்க் கட்சியினர் கைகளில் ஆயுதங்களை ஏந்தியபடி மோட்டார் சைக்கிள்களிலும், வாகனங்களிலும் சர்வ சாதாரணமாக பவனி வருவர். அவ்வாறான வேளைகளில் இவ்வாறான சம்பவங்கள் நடந்திருந்தால் கூட தமிழ்க் கட்சியினருக்கும், புலிகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் இருந்திருக்கும். ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல. தமிழ்க் கட்சியினரின் ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட்டு, அவர்கள் சுய பாதுகாப்புக்குக்கூட ஆயுதம் எடுத்துச்செல்லமுடியாத அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்ட நிலை.

தவிர அண்மையில் கொல்லப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களிடமிருந்து படையினரால் வழங்கப்படும் பாஸ்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் படையினர் மத்தியில் உள்ள லஞ்ச லாவண்யத்தைப் பயன்படுத்தி புலிகள் இந்த பாஸ்களை பெற்றிருப்பதும் அறிய வந்துள்ளதாம்.

இவ்வாறான ஏகப்பட்ட ஓட்டை ஒடிசல்களுடன் கூடிய பாதுகாப்புக் கெடுபிடிகளை வைத்துக் கொண்டு வவுனியா நகரப் பகுதியை தொடர்ந்தும் தமது கைகளில் வைத்திருப்பது என்பது படையினருக்கு [illegible] தெரிந்த [illegible] என்பதில் சந்தேகமில்லை. ★

## கிழக்குப் பாதுகாப்பு...

(7 ஆம் பக்கத் தொடர்)

தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகளின் சக்தி மிக்கதான அணியொன்று கிழக்கிலங்கையில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்துள்ளதா என்ற சந்தேகம் படைத் தரப்புக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்தே திருகோணமலை, மன்னார், மட்டக்களப்புப் பிரதேசங்களில் தீவிர சோதனைகளும் சுற்றிவளைத்துத் தேடும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. முகமூடிகளின் துணையுடனும் இத்தகைய சோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய சோதனைகளும் தேடுதல்களும் தொடர்கதையாகி விட்ட நிலையில் பொது மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது

இதே வேளை இத்தகைய சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி சந்தர்ப்பவாதிகள் மட்டக்களப்பில் கொள்ளைச் சம்பவங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இயந்திரத் துப்பாக்கிகளையும் கைக்குண்டுகளையும் கொண்டு செல்லும் இவர்கள் விடுதலைப்புலிகளின் பெயரால் இத்தகைய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். என்றாலும் கூட இத்தகைய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் குழுவினரைச் சேர்ந்த இருவரைக் கொள்ளைக்கு இலக்கான வீட்டு உரிமையாளர் ஒருவர் துணிச்சலுடன் அடையாளம் காண்பித்ததைத் தொடர்ந்து இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் அம்பலத்திற்கு வரத் தொடங்கி உள்ளன.

இத்தகைய சந்தர்ப்பவாதிகள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவதுடன் மட்டுமன்றி பகல் வேளைகளில் வழிப்பறிகளிலும் வெகு துணிச்சலாக ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்புப் பகுதிகள் எனப்படும் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் கூட இத்தகைய வழிப்பறிக் கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ் மக்கள் துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி உள்ளம் மரத்து விட்ட நிலையில் இத்தகைய கொள்ளைகளும் வழிப்பறிகளும் மக்களை மேன்மேலும் நிம்மதி இழக்க வைத்து விட்டன.

இந்த நிலையில்தான் படைக்குவிப்பும் இடைக்கிடை இடம் பெறும் பரீட்சார்த்த படைநகர்வுகளும் கிழக்கிலங்கையில் மீண்டும் ஒரு தாக்குதல் இடம்பெறப் போகின்றதா என்ற அச்ச உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது. பல்லைக் கிராமங்களில் வாழும் மக்களும் ஏனையோரும் பாதுகாப்புக்கருதிநகரப்புறங்களை நாடிவரும் நிலையும் உருவாகி வருகின்றது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் மட்டக்களப்புக்கான விஜயமும் அவர் படை அதிகாரிகளுடன் மேற்கொண்ட மந்திராலோசனைகளும் அரசியல்வாதிகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் இன்றைய நிலை தொடர்பான ஆய்வுக்கான ஆலோசனைகளாக இருந்த போதிலும் கூட படைக்குவிப்பும் படையினரின் பரீட்சார்த்த நடவடிக்கைகளும் கிழக்கிலங்கையில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கை இடம் பெறப் போகின்றதா என்ற சந்தேகத்தினை பெருமளவில் உருவாக்கி உள்ளது ★

## விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து தென்மராட்சி பிரதேசத்தில் சுகாதாரக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன. வாய்க்குள் ஏற்படும் நோய்களும் அவற்றின் தடுப்பு முறைகளும் மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன என்று கழகச் செயலாளர் லயன் வீ. வீ. மகாலிங்கம் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி மத்திய மருந்தகத்திலும் புதன்கிழமை கைதடி வடக்கு ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையத்திலும் கைதடி மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி டாக்டர் பொ.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்குகளில் லயன் அ. பொ. செல்லையா கருத்துரை வழங்கினார். (இ-117)


# தேவை

**வடக்கு, கிழக்கு மாகாண சபை**
**சுற்றுலா விடுதி, யாழ்ப்பாணத்திற்கு**
**(CIRCUIT BUNGALOW)**
கீழ்க் குறிப்பிடப்படும் வசதிகளைக் கொண்ட கட்டடம் தேவை.

1. 2 கட்டில்கள் போடக்கூடிய இணைந்த மலசல கூடங்களுடனான 3 அல்லது 4 அறைகள்
2. மண்டபம் (Sitting Hall) சாப்பாட்டு மண்டபம் (Dining Hall) சமையலறையும் அதனுடன் இணைந்த ஆயத்த அறையும் (Pantry)
3. விடுதிக் காப்பாளர் தங்குவதற்கான தனியறை
4. சாரதி தங்குவதற்கான வசதி
5. 2 அல்லது 3 வாகனங்கள் தரித்து நிற்கக் கூடிய இடவசதி
6. வேலையாள் மலசலகூடம், குளியல் அறை
7. குழாய் நீர் வசதி, மின்சார வசதி

மேற் குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய கட்டடமிருப்பின், மாதாந்த வாடகை குறித்து கலந்தாலோசிப்பதற்கு 15—09—99 ஆம் திகதிக்கு முன் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்- 021 - 2643

ஏ. சி. செபநாயகம்,
பிராந்திய ஆணையாளர்,
**வ.கி.மா., யாழ். மாவட்டம்.**

**48, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(சி/ 8458)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஓக. 8

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம் மற்றும் கப்பல் மூலம் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே. அந்த வரிசையில் இம்மாதம் (ஓகஸ்ட்) 3 ஆம் திகதிவரை விமான மூலம் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் விவரங்கள் இன்று முதல் பிரசுரமாகுகின்றன.

### சண்டிலிப்பாய்

வை. ரஞ்சினிதேவி(093300 ஏ], கே. புஷ்பராணி[100127 ஏ], கே. சிறீஸ்கந்தராஜா [100150ஏ], ஏ. கணேசதாசன் [102171ஏ], ஜி. கௌதீஸ்வரி [102171பீ], சணேசதாசன் [102171சீ], தம்பிமுத்து [102185ஏ], பீ. குணரட்ணராசா [102185பீ] ஜீ. குகன் [102185சீ], எஸ். குட்டித்தம்பி [103499ஏ], எஸ். கலாஜினி [103499பீ], எஸ். கங்காமணி[103568ஏ], பீ. நாகேந்திரன்[103666ஏ]. ஆர். நாகேந்திரன் [103666 பீ], என். நல்லைமகள் [103666சீ], எஸ். முத்துராஜா [103685ஏ], கே. ரட்ணவடிவேல் [105036ஏ[, சி.ஈ. ரஞ்சிராஸ் [105131ஏ], எஸ். செல்வதுரை [105141 ஏ], பீ. அஜிதா [105162ஏ]

எம். சிவகுமார் [105185 ஏ), வீ. செல்வம் (105199 ஏ), கே. முத்தையா [105205 ஏ], கே. முத்தையா [105205 பீ], கே. பாலசுப்பிரம்மா [105221ஏ], எஸ். ஷனுமதி [105225ஏ], பீ. உதயராசா [105245ஏ], வை. சிவகுமார் [105251ஏ], ஏ. வேலுப்பிள்ளை [105260ஏ], எஸ். ராசலிங்கம் [105278ஏ].

வீ. ராசலிங்கம் [105278 பீ], வீ. புலேந்திரராசா [105284ஏ], கே. ரதிமலர் [105284பீ], கே. கசிந்தினி [105284சீ], என். செல்லத்துரை [105320ஏ], என். வடிவாம்பிகை [105320பீ], என். சண்முகசெல்வி [105320சீ[, என். மயில்வாகனம் [105354 ஏ], பீ. நாகேந்திரம் [105354பீ], எம். ஆர். புனிதவதி [105780ஏ].

பீ. வரதராசா [105785 ஏ], எஸ். வரதராசா [105785பீ], ஏ. ரஞ்சிதா ]105812 ஏ], ஏ. விநாயகமூர்த்தி [105841 ஏ], ரீ. விநாயகமூர்த்தி [105841 பீ], வீ. தவரூபன் [105841 சீ], வீ. ஷர்மிளா [105841 டீ], ஆர். பஞ்சாட்சரம் [105989 ஏ], ரீ. சிறிராஜ் [106016ஏ], எஸ். ஹரிகரன் [106016 பீ].

பீ. பாஸ்கரன் [106052ஏ], எம். பொன்னுத்துரை [106082சீ], பீ. ஜெனிற்றா [106082 பீ], ஆர். பொன்னுத்துரை [106082 சீ], யூ. செல்லத்துரை [106152 ஏ], யூ. கௌதமி [106152 பீ], எஸ். மகேந்திரன்[106169ஏ], எம். மகேந்திரன்]106169பீ], கே. வேலாயுதன்பிள்ளை [106180ஏ], என். விக்னேஸ்வரன் [106197 ஏ].

எஸ். தம்பிராசா [106201 ஏ], பீ. தம்பிராசா [106206 ஏ], பீ. நந்தகுமார் [106228 ஏ], என். விஜயமாலா [106241ஏ], எஸ். தம்பித்துரை [108618ஏ], எஸ். தம்பித்துரை [108618பீ], எஸ். கே. ரஞ்சனாதேவி [108626ஏ[, கே. ரா்ஜாட்ணம் [108628ஏ], பீ. சிவரூபன் [108638ஏ], டபிள்யூ. சந்திரசேகரம் [108644ஏ].

பீ. சுந்தரராஜா [108664 ஏ], என். சுந்தரராஜன் [108664பீ], ஆர். சிவகௌரி [108811ஏ], பீ. சோமசுந்தரம் [108816ஏ], கே. சுந்தரலிங்கம் [108827ஏ], ஆர். சின்னத்தம்பி [108844ஏ], பீ. குகதாசன் [108910ஏ], வை. அந்தோனிப்பிள்ளை [108928ஏ], ரீ. ரவிச்சந்திரன் [108940ஏ], ஏ. கே. சத்திபானந்தி [108963ஏ].

எஸ். மாணிக்கதியாகராஜா [108977ஏ], எம். சண்முகநாதன் [108989ஏ], ஏ. சண்முகநாதன் [108989 பீ], ஆர் ஜேம்சன் [109003 ஏ], கே. சிவராஜா [109020 ஏ], கே. யோகராஜா [(109035ஏ], எஸ். குழந்தைதம்பி [109084ஏ], ஆர். சுப்ரமணியன் [109087ஏ], எஸ். சிவரூபன் [109103ஏ].

### தெல்லிப்பழை

எம். வாசுகி (091796 ஏ), கே சிறீதரன் (103656 ஏ), கே கனகரத்தினம் (103683 ஏ), ஏ. பத்மநாதன் (103709 சீ), பீ. றஜீவன்(103709 டீ) பீ. செல்வச்சந்திரன் (103709 ஈ), எஸ் பத்திநாதன்103709 எவ்), எஸ் சிவபாலன்(105115 ஏ), எம். சாமுவேல் (105207 ஏ), ஜே. பிரதீபன் (105207 பீ), எஸ் சோதிமணி(105207 சீ) எம். அருமைநாயகம் (105283 ஏ), ஏ. இந்திராணி (105283 பீ), ஏ. சுஜேந்திரன் (105283 சீ), எஸ். சண்முகம் (106124 ஏ), எஸ். சுப்பிரமணியம் (108673 ஏ), எஸ் சிவவதனி (108673 பீ), வீ. மகேந்திரன் 108682 ஏ), டீ. மகேந்திரன் (108682 பீ), என் ஜெயரஞ்சன் (108959 ஏ), எஸ் நாகேஸ்வரி(109013 ஏ). கே பொக்கபிள்ளை (109082ஏ), பீ. ஆச்சிப்பிள்ளை (109083 ஏ), எஸ். ராஜேந்திரா (109085 ஏ)

### கோப்பாய்

ஏ. அருளேசன் (091737ஏ), கே. கந்தையா (096593ஏ), ஞானலக்சுமி (096593பீ), வானதி (096593சீ), எஸ். ஜெயக்குமாரன் (096749ஏ), எஸ். புஷ்பமலர் (097693ஏ), ரீ நிரஞ்சன் (097794ஏ), கே. ஜெயாதரன் (097872ஏ), கே. ஞானாம்பிகை (097872பீ), ஜி. மாணிக்கம் (097876ஏ),

ஜி விக்னேஸ்வரி (097876 பீ), ஜி. டிலுமன் (097886சீ), ரீ. சவெிராஜா (099856ஏ), எஸ். லோகநாதன் (099856 பீ), கே. அருளேஸ்வசாகர் (099861ஏ), ஏ. தயாகரன் (099861பீ), எஸ். அப்புக்குட்டி (099882ஏ), வீ மனோகரன் (099890ஏ), ஜீ. ராஜரட்ணம் (099990ஏ), கே. சிவ்தாசன் (101669ஏ).

கே. வள்ளிப்பிள்ளை [101669 பீ], வீ. சிவனேஸ்வரன் ]101675 ஏ], என். கந்தசாமி [101680 ஏ[, கே. சுமித்ரா [101680 பீ], எஸ். வைரமுத்து [101740 ஏ], எஸ் ரவீந்திரன் [101750 ஏ], ஆர். சிவானந்தி [101750 பீ], கே. சிவசோதி [101752 ஏ], ஈ ராஜநாயகம்[101799 ஏ], ஆர். ராஜேஸ்வரி [101799பீ].

ஆர். ஜனகன் [101793 சீ), ஆர். ஜனகன் [101793 டீ]. சி. நடராஜா [101801 ஏ], பீ. விநாயகமூர்த்தி [101855 ஏ], எஸ். கோகுலன் [104049 ஏ], பீ. பிறைசூடி [104054 ஏ], பீ. சத்தியவாணி [104054 பீ], எஸ். கிதினன் [104057 ஏ], ஆர் முகுந்தன் [104063 ஏ], எம். கௌரி [104065 ஏ[.

எம். சீதாராம் (104063சீ)' எஸ். சுரேஷன் (104064ஏ)' சி. கௌரி (104065ஏ), ரீலக்சன் (104065பீ), எஸ் கந்தையா (104066ஏ), எஸ். செல்வரட்ணம் (104066பீ), பீ. தெய்வானைப்பிள்ளை (104067ஏ), பீ. சேனாதிராஜா (104067பீ), என், செல்வநாயகம் (104068ஏ), எம். தனசிங்கம் (104070ஏ).

ரீ. சிறீஸ்வரன் (104070 பீ), பீ. செல்வராஜா (104089ஏ), எஸ். கோபிகா (104089பீ), எச் ரஞ்சிதமலர் (104099ஏ). எஸ். சிவஞானம்(104100ஏ), எஸ். ஈ இன்பமலர் (104107ஏ), வீ. ராசேஸ்வரன் (104130 ஏ), பீ. ராஸ்லன் (104132 ஏ), பீ. வசிகரன் (104135 பீ), எஸ். லிங்கராசா (104144ஏ),

கே. தம்பிராஜா [104147 ஏ). கே. புவனேஸ்வரி (104147 பீ). என். கனகரட்ணம் (104156 ஏ), ரீ. வல்லிபுரநாதர் (104157 ஏ). வீ. குகனேசன் 104157 பீ), கே. செல்வராஜா (104163 ஏ). எஸ். நாகசையர் (104257 ஏ), வீ. நவரட்ணம் (107605 ஏ) வீ. நவரட்ணம் (107605 பீ). வீ. நவரட்ணம் (107629 ஏ),

எஸ். கணபதிப்பிள்ளை (107634ஏ) எஸ். புவராணி (107634பீ), ஏ. தவராசஸ் (107640ஏ), ரீ. கதிரன் (107650ஏ). ஜே. தவராணி (107793ஏ). பீ. தங்கரட்ணம் (109622ஏ). என் நவரட்ணம் (109689ஏ), எஸ். நடராஜா (109700ஏ), கே. ஆனந்தராஜா (110020ஏ). ரீ. பிரகாஷ்(110020பீ), எம். சிவரட்ணம் (110099ஏ). என். ஆச்சிப்பிள்ளை (11950ஏ), சிவமதி (119500பீ), என். ஞானகரன் (119500சீ).

(ஐ-ரி)

[தொடரும்]

---


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



குரும்பசிட்டி

அமரர் முத்துச்சாமி திருநாவுக்கரசு

(முன்னாள் உத்தியோகத்தர். லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம், சமாதான நீதிவான், திடீர் மரண விசாரணை அதிகாரி)

தோற்றம்: 24 – 12 – 1943

மறைவு: 07 – 07 – 1999

குரும்பை நகரினிலே மலர்ந்தாய் அப்பா
மக்கள் நேயனாய் மக்கள் போற்ற வாழ்ந்தாய் அப்பா
அந்தோ சேய்கள் தம்துயரினால் துவண்டாய் அப்பா
மீண்டும் நீ மழலையாகி நாமெல்லாம்
கதிகலங்க சொர்க்கம்தான் போனாயோ அப்பா?

உன் நினைவால் வாடும்:
மனைவி, மக்கள், உற்றார்.
உறவினர், நண்பர்கள்.

கே.கே.எஸ் வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

(67991)


## இரு கள்ளு தவறணைகள் புனரமைப்பு

நெல்லியடி, ஓக. 8

பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள இரு கள்ளுத் தவறணைகள் சுமார் 80 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

துன்னாலை வடக்கில் 30 ஆயிரம் ரூபா செலவிலும் பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெருவில் 50 ஆயிரம் ரூபா செலவிலும் இவ்விரு தவறணைகளும் சகல வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளன.

(ஐ–109)


## விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகம், யாழ். இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு அண்மையாக இல. 127, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் $3\frac{1}{2}$ பரப்பில் அமைந்துள்ள வீடு வளவும், மானிப்பாய் லேட்டன் (ஆனைக்கோட்டை) வீதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 5 பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகள்:

திருமதி மனோகரன்
லண்டன்,
தொ. பேசி: 1819525687

அல்லது

திரு. V. கணேசலிங்கம்
கொழும்பு,
தொலைபேசி: 714363

தரகர்கள் தேவையில்லை

(சி/8394)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்

திரு. நா. கதிர்காமத்தம்பி
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
கதிராசிப்பிள்ளை நாகமுத்து

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்.
யா/ இளவாலை மெய்கண்டான் ம. வி.
இளவாலை.

(67977)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 29 – 10 – 1946



மறைவு: 09 – 07 – 1999

திருமதி குமாரசாமி பரமேஸ்வரி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[68006]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அரியதாஸ் றெஜினால்ட் ஆகிய எனது விசேட அடையாளஅட்டை நாவற்குழிக்கும் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ் பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்து உதவவும். (67998)

சந்திரகுமார் சாந்தாதேவி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (0905005573) தாவடி பத்திரகாளி கோயிலுக்கும் குளப்பிட்டி சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சண்டிலிப்பாய் கிழக்கு வீரபத்திரர் கோயிலடி, சண்டிலிப்பாய் என்ற முகவரிக்கு அறியத் தரவும். (68023)

திருமதி செபமாலை அஞ்சலீனா (ஓய்வுபெற்ற ஆசிரியை) என்பவரது தேசிய அ. அட்டை (225653089V), விசேட அ. அட்டை இரண்டும் 30-07-99இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 71, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (68033)

## திருமணசேவை

36 வயது செவ்வாய் தோஷமுள்ளஆசிரியருக்கும் 32வயது கிராம அலுவலருக்கும் மணப்பெண்கள் தேவை அத்துடன் எம்மிடம் 1968, 1969, இல் பிறந்த M. B. B S டாக்டர்களுமுண்டு முழு விவரங்களுக்கு தொடர்பு: இயக்குநர் விநாயகர் திருமண சேவை இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி. (67984)

## இறைச்சக்கோழி

இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து [பாதி உட்பட] பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, அத்துடன் அடைமுட்டையும் வாழைக் குட்டிகளும் உண்டு. தொடர்பு: இல. 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு], முத்திரைச்சந்தையடி, நல்லூர். (67888)

இறைசசிக்கோழி (Broiler), விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 31, மான்ஸ் ஸ்கூல் லேன். உடுவில், சுன்னாகம். (67859)

இறைச்சிக் கோழி (புறோயிலர்) கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (68039)

இறைச்சிக்கோழி [Broilers] விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி. யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்). (68016)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 30 வயது மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை, ஜாதகப் பொருத்தம் கவனிக்கப்படமாட்டாது, விளம்பர இல. 927 மே / பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம், (67007)

## வீடுவிற்பனைக்கு/வாடகைக்கு

சபாபதி வீதி, தலையாழி வைரவர் கோயிலுக்கு மேற்கு பக்கமாக உள்ள இரண்டு வீடுகள் (ஒரே காணியில்) ஒருமித்தோ அல்லது தனியாகவோ விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உடன் கொடுக்கப்படும். இரவு 7 மணி தொடக்கம் 10 மணிவரை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் கொழும்பு. இல 502129. [சி/8423]

## விற்பனைக்கு

புதிய மொடல் GO 7A Sisil குளிர்சாதனப் பெட்டி (Refrigerator) விற்பனைக்கு உண்டு. தொடர்பு சு சந்திரதாஸ் இல. 47 மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் ஞாயிறு முழுநாளும் மற்றும் தினங்களில் பிற்பகலில் மட்டும் பார்வையிடலாம். (68009)

Olimpia, Halda, Remington தமிழ்த்தட்டெழுத்து இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. ரேணுகா 78, கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம். [67954]

6 சிறி ஜப்பான் கார். கலர் T V., BLW T.V. டெக், பற்றரி மற்றும் வீட்டுத்தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. தங்கராஜா பதிவாளர் ஒழுங்கை. சுதுமலை தெற்கு, மானிப்பாய். ((67930)

## [O/L] 99 கணிதம்

உங்கள் வீடுகளுக்கு வந்து தரம் 6 தொடக்கம் O/L வரையுள்ள மாணவர்கட்கு கணிதம் கற்பிக்கப்படும்- 1 மணித்தியாலத்திற்கு 75/- பெற்றோர் தொடர்பு: சங்கர் 501 A, மொகமடன் பள்ளிவீதி. ஐந்து சந்தி, யாழ்நகர். (67981)

## O/L MATHS

அதிவிஷேடமாக 40 பாடவேளைகளில் ஆரம்பத்திலிருந்து Paper Class வரை (ஆண்டு 6 லிருந்து 10 வரை Distinction Credit) பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர்: 85, சிவன் கோவிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67986)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய 7 இல் செவ்வாய் கிரகபாவம் கூடிய பெண்ணுக்கு மணமகன் தேவை. விண்ணப்பிக்குக. விளம்பர இல- 926 மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67997)

# முக்கிய அறிவித்தல்

## தவறிவிட்டது

பருத்தித்துறை — கொடிகாமம் வீதியில் சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்திற்கும் கொடிகாமம் ப. நோ. கூ. சங்கத் தலைமைப் பணிமனைக்கும் இடையில் கோயில் உறுதியும், யாப்பும் அடங்கிய கோவை [File] ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இக்கோவையைக் கொடிகாமம் கோகிலா நேநீர்ச் சாலையில் கையளித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[68020]

# கண்ணீர் அஞ்சலி

ஆவரங்கால் நடராச ராமலிங்க சுவாமி (சிவன்) கோயில் தர்மகர்த்தா சபை உறுப்பினரும் வலி கிழக்கு வ. ப. ப. நோ. கூ. சங்க முன்னாள் பணியாளருமான

## C. T. கனகசபை

அவர்கள் காலமானதை முன்னிட்டு எமது ஆழ்ந்த கவலையை வெளியிடுகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது பிள்ளைகள், சகோதரர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நடராச ராமலிங்க சுவாமி கோவில்
தர்மகர்த்தா சபையும்
திருப்பணிச் சபையும்
சிவாச்சாரியர்களும்.

ஆவரங்கால்,
புத்தூர். (68019)

# நீங்கள் எங்களை விட்டுச்சென்று
# இன்று ஓராண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 | 20 |
| 05 | 07 |
| 1946 | 1998 |

## திருமதி கமலாம்பிகை சிவபாதசுந்தரம்

திதி: 08-08-1999

அம்மா நீங்கள் எங்களை விட்டுச் சென்று ஓர் ஆண்டு முடிந்துவிட்டது. நம்ப முடியவில்லை. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இது நம்ப முடியாத உண்மை. இதனால் எங்கள் கவலையும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது. அந்நினைப்புடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகப்பன், மகன்மார்,
கணவன்.

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை. (67949)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சுப்பிரமணியம் பன்னீர்ச்செல்வம்

(செல்வம்)

அன்னை மடியில்: 08 – 01 – 1961
இறைவன் திருவடியில்: 09 – 07 – 1999

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன — உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ — தேறுதல்
சொல்ல தெய்வம் வந்தென்ன செல்வனே — உன்
திருமுகம் பார்த்தால் போதாதோ — எம் உள்ளங்கள்
துடித்திட நீ எங்கு சென்றாய் — இல்லை
நம்ப முடியவில்லை நீ எங்களில் இருக்கின்றாய்
ஒரிரு மாதமென்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
எந்நாளும் உன் நினைவில் கண்ணீரால் கரைகின்றோம்.

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

40, பிறவுண் வீதி,
5ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (68034)

# 29 ஆம் நாள் நினைவில்

## கனவுகள் கலையாத கலக்கமும் நினைவுகள் நிலைக்காத நினைவும்



## செல்வி சுமங்கலி குணநாயகம்

மண்ணுலகில்: 15-09-1965
விண்ணுலகில்: 11-07-1999

சென்றதம்மா ஒரு திங்கள்
சென்ற இடம் சொல்வாயோ நீ...
எம் கனவை ஒரு கணத்தில்
கலைத்தவன் காலனவன்
காலங்கள் கடந்தாலும்
கலங்குதம்மா எம் கணகள்
உன் பிரிவால் உனையிழந்து
தவிப்பவர்கள் அன்னை முதல்
அன்புச் சகோதர, சகோதரிகள்
உற்றார், உறவினர்கள் வரைக்கும்
உன்பிரிவை மறக்கவும் முடியவில்லை
மறக்கவும் தெரியவில்லை.

இன்று 08—08—1999 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

உன் நினைவில்
குடும்பத்தினர்.

[680 3?]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் சிகிச்சை நிலைய புனரமைப்புக்கு நிதி ஒதுக்குக

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 8

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு வடபிராந்திய படைத் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா அனுமதி அளித்துள்ள அதே வேளையில் இந்தச் சிகிச்சை நிலையத்தை புனரமைப்பு செய்வதற்கு தேவையான நிதியை ஜனாதிபதி விசேட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தருக.

மேற்கண்டவாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை இந்தக் குழுவின் இணைச் செயலர்களான சு. பரமநாதன், வண பிதா ஜே.பி.ஈ. செல்வராஜா ஆகியோர் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தச் சிகிச்சை நிலையத்தைப் புனரமைப்புச் செய்யும் முன்னேற்பாடாக அதிகாரிகள்குழு ஒன்று தெல்லிப்பழையிலுள்ள இந்தச் சிகிச்சை நிலையத்துக்கு நேரில் சென்று புனரமைப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது.

இந்த மதிப்பீட்டு அறிக்கை தற்பொழுது சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்தச் சிகிச்சை நிலையக் கட்டடத்தை புனரமைப்புச் செய்து மீள இயக்குவதற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது.

எனவே மனித நேய அடிப்படையில் இந்தப் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை புனரமைப்புச் செய்து மிக குறுகிய கால எல்லைக்குள் இயங்கச் செய்வதற்கு ஜனாதிபதி விசேட நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

அத்துடன் இந்த நிலையத்துக்கு தேவையான உபகரணங்களையும் வழங்கி மேலும் சிகிச்சை நிலையத்தைத் தாமதமின்றி ஆரம்பிக்க அதிகாரிகளுக்குபணிக்குமாறு கோருகின்றோம்.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5-9-ரி)

# ஜெயலத் ஜெயவர்த்தன யாழ். வர விருப்பம்

யாழ்ப்பாணம், ஓக 8

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளை நேரில் தெரிந்து கொள்வதற்காக தான் யாழ்ப்பாணம் வர விரும்புவதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டில் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விவசாயிகளும், சிறு வர்த்தகர்களும் மாணவர்களும் பல முறைப்பாடுகளைத் தமது கவனத்துக்குத் தெரியப்படுத்தி உள்ளனர் என்றும்—

மேலும் பலர் தமது பிரச்சினைகள் குறித்து முறையிட்டு பரிகாரம் பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்து தமக்கு கடிதம் அனுப்பி உள்ளனர் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாய நடவடிக்கைகளில் ஏற்படும் இடர்பாடுகள், தடைகள் மற்றும் பாதிப்புகள் குறித்தும்—

அத்தியாவசிய சேவைகள் கிடைப்பதில் உள்ள பாதிப்புகள் பற்றியும்—

வர்த்தக நடவடிக்கைகளில் சிறு வியாபாரிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், பாவனையாளர்களின் பாதிப்புக்கள் தொடர்பாகவும்—முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புவோர் 'இலக்கம் 26 'பி', சம்மிட் பிளட்ஸ், ஜாவத்த வீதி, கொழும்பு—5' என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது 595168 என்ற இலக்கத்துக்கு 'பக்ஸ்' மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்களின் இத்தகைய பிரச்சினைகளை தாம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்து அவற்றைத் தீர்ப்பதற்கு இயன்றளவு முயற்சி எடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(இ-ஐ)

# நூற்றாண்டின்...

(ஏழாம் பக்கத் தொடர்)

தோச நட்சத்திரங்களாகும்'

யாழ்ப்பாணத்தில் பார்சுவ சூரியகிரகணம் தொடங்கும் பொழுது மற்றைய கிரகங்களின் நிலையும் சூரியனின் நிலையும் முறையே செவ்வாய்—226 பாகை, 54 கலை; புதன்—121 பாகை, 06 கலை; வியாழன் — 34 பாகை, 40 கலை; வெள்ளி — 51 பாகை, 51 கலை: சனி — 46 பாகை, 52 கலை; சந்திரன் — 138 பாகை, 48 கலை; சூரியன் — 138 பாகை, 28 கலை.

### அபூர்வ நிகழ்ச்சிகள்

பூரண சூரிய கிரகணம் ஆரம்பிப்பதற்கு முன் புதன் கிரகம் சூரியனுக்கு அருகிலும் வெள்ளிக் கிரகம் அதற்கடுத்தாற்போல் தெரியும். பூரண சூரிய கிரகணத்தின்பொழுது பல அபூர்வ நிகழ்ச்சிகள் நிகழ வாய்ப்பு உள்ளன. எனவே இப்பகுதிகளில் விஞ்ஞானிகள் பற்பல நவீன உபகரணங்களுடன் கூடாரம் அடித்துத் தங்கி உள்ளனர்.

அதிகமாக மின்சார அலைகள் பாதிப்படையும். எனவே தான் பிரான்ஸ் நாட்டில் இதற்காக ஒரு வானொலி அலையை ஒலி பரப்பி அதனில் ஏற்படும் மாற்றங்களை ஆராய உள்ளனர். வான வெளியில் 1200 கிலோ மீற்றர் தொலைவில் மிதக்கும் தொலைநோக்கி மூலம் பல ஆராய்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இங்கிலாந்திலிருந்து சூரிய கிரகணம் செல்லும் கிழக்குச் திசையை நோக்கி அதன் வேகத்தில் ஒரு 'கொன்கோட்' விமானமும் பறந்து பல ஆராய்ச்சிகள் நடத்தவுள்ளது.

பார்சுவ சூரிய கிரகணத்தைக்கூட நமது கண்களால் நேரடியாகப் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் அப்பொழுது தோன்றும் புற ஊதாக் கதிர்கள் கண்களின் திரையைப் பாதித்து விடும். எனவே கடும் கருமையான கண்ணாடிகளுக்கு ஊடாகவே பார்க்கவேண்டும். முகம் பார்க்கும் கண்ணாடிக்கு மேல் சிறு துவாரமுள்ள 5 மில்லி மீற்றர் கனமுள்ள தடித்த மட்டையால் மறைத்து சூரியனின் ஒளியை ஒரு வெள்ளைச் சுவரில் பிடிக்கச்செய்து அவ்வெளிச்சத்தைப் பார்க்கலாம். யாழ்ப்பாணத்தில் இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. இக்கிரகணத்தைப் பார்த்தால் கிரகணம் பார்க்கவேண்டும் என்ற பசி தீரும் வான சாஸ்திரம், சோதிடம் என்பவற்றின் உண்மையும் புரியும்.

# சமயவிழா ஒத்தி வைப்பு

தென்மராட்சி, ஓக. 8

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்க ஸ்தாபகரினதும் ஆத்ம ஜோதி நா. முத்தையாவினதும் ஞாபகார்த்தமாக இன்று இடம்பெறவிருந்த இந்துசமய விழா மற்றொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டே இந்த விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விழா அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-102)

# ஆலோசனைக் கூட்டம்

கொழும்புத்துறை, ஓக 8

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் உற்சவகால சமயச் சொற்பொழிவுகள், பணிகள் பற்றிய ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு, கோணாவளை ஒழுங்கை, கொக்குவிலில் உள்ள பணிமனையில் பேரவையின் தலைவர் ப. சந்திரசேகர தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் நல்லூர் உற்சவகால நிகழ்வுகள், பசுவதை, வன்னியில் துயருறும் மக்கள் பற்றிய விடயங்கள் ஆலோசனைக்கு எடுக்கப்படும்.

[ஐ-30]

# விண்ணப்பத்தை சமர்ப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 8

தீவகவலயப் பாடசாலைகளில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்று ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் பட்டதாரி ஆசிரிய சேவையில் உள்ளீர்ப்புத் தொடர்பான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வலயக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒரு வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் குறித்த விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணமாக்கி பாடசாலை வரவு விவரம் மற்றும் சேவை தொடர்பான அதிபரின் விதப்புரையுடன் வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

இதேவேளை —

நிரந்தர சேவையில் உள்வீர்க்கப்படுவோர் இலங்கை ஆசிரிய சேவையில் 3 1இனுள் இணைத்துக் கொள்ளப்படுவர் என வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

# நூலக அபிவிருத்தி அலுவலருக்கு விரைவில் சம்பள கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 8

நாலாயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்க வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக குடாநாட்டின் ஐந்து வலயக் கல்விப் பணிமனைகள் மூலம் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் விவரம் மற்றும் லீவு விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி விவரங்கள் சேகரிக்கப்பட்டதும் கடந்த இரண்டு மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை—

குடாநாட்டில் அபிவிருத்தி உதவியாளர், அபிவிருத்தி இணைப்பாளர், காணி அலுவலர், வரவு செலவுத் திட்ட உதவியாளர் மற்றும் மொழி பெயர்ப்பாளர், சமுர்த்தி கணக்காய்வாளர் போன்ற பதவிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்குரிய கொடுப்பனவுகள் பற்றி இது வரை அறிவிக்கப்படவில்லை.

(ஐ-7)

## தமிழகத்திலுள்ள முகாம்களில்

# அடிப்படை வசதிகளின்றி ஈழ அகதிகள் அவதி

தமிழக அகதி முகாம்களில் வசிக்கும்இலங்கைத்தமிழ் அகதிகள் சிறைக்கைதிகளை விட மோசமாக நடத்தப்படுகின்றனர் என்று இந்திய மத்திய அரசுக்கு முறையிடப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

தமிழகத்தில் உள்ள மொத்தம் 133 அகதி முகாம்களில் மொத்தம் 65 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர். இவர்களுள் அனேகர் இலங்கையின் வட பகுதியை சேர்ந்தவர்கள். இவர்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இன்றி கஷ்டப்படுகிறார்கள்.

குறிப்பாக வேலூர் சிறப்பு முகாமில் தங்கியுள்ள 56 இலங்கை தமிழ் அகதிகளும் சிறைக் கைதிகள் போலவே நடத்தப்படுகிறார்கள் பொலீஸ் பாதுகாப்பிலேயே இவர்கள் உள்ளனர். வெளி உலகை இவர்கள் பார்ப்பதும் கிடையாது. நண்பர்களோ, உறவினர்களோ இவர்களை பார்ப்பதற்கும் அனுமதிக்கப்படுவதில்லை. தொலைபேசியில் நண்பர்களுடன் கதைப்பதற்கு கூட இவர்களுக்கு அனுமதியில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-ரி)

## பரீட்சை நாள்களில்

# தாக்குதலை நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தக் காலப் பகுதியில் படையினரும் — விடுதலைப் புலிகளும் வான் தாக்குதல்களையும், இராணுவ நடவடிக்கைகளையும்உடன்நிறுத்த வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசுபடைகளும் போராளிகளும் மோதிக்கொள்ளும் நிலையைத் தவிர்த்து சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டும் என்றும் அவர் இந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

(இ-5)

## வன்செயல்களால்

# சீநோர் கட்டடங்களுக்கு 34 இலட்சம் ரூபா இழப்பு

யாழ்ப்பாணம், ஓக.8

கடந்தகால வன்செயல்களினால் குருநகரில் சீநோர் தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு மட்டும் 34 லட்சம் ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காரைநகரிலுள்ள சீநோர் தொழிற்சாலைக்கு செல்ல முடியாதிருப்பதால் அதற்கு ஏற்பட்டுள்ள சேதவிபரங்கள் பற்றி மதிப்பீடு செய்ய முடியாத நிலைபேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


உ

## வில்லூன்றி புனித தீர்த்தம்
## ஆடி அமாவாசைப் பெருவிழா

11-08-99 புதன்கிழமை

தீர்த்தோற்சவம்:

காலை 6-45 வசந்த மண்டபப் பூசை
காலை 8-00 தீர்த்தவாரி
மு. ப. 10 மணி வரை தீர்த்தக் கட்டத்தில் அனுக்கிரகம்
மு. ப. 10 மணிக்கு சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல்

பிதிர்க் கடன்:

காலை 8-15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்ம பரிபாலன சபை,
வில்லூன்றி தேவஸ்தானம்
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்
(68055)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்)

கான தமது ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி அடைந்துள்ளதை அடுத்து பாதையைத் திறப்பதற்குச் சம்மதம் தெரிவித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளால் அனுப்பப்பட்ட உத்தியோகபூர்வக் கடிதம் நேற்றிரவு 7-30மணியளவில் தான் வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்குக் கிடைத்தது. என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து நாளை திங்கட்கிழமை முதல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வன்னிப் படைகளின் தளபதி வவுனியா அரச அதிபர் கே. கணேசிடம் கேட்டுக் கொண்டார்.

முதல்கட்டமாக 500பொது மக்களையும் 10 லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் அனுப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளை போக்குவரத்து ஆரம்பமாகும் போது செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழித்துணை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து சுமார் 200 பேரை நாளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுப்புவதற்கும் —

தொடர்ந்து ஒரு வாரம் வரை ஒவ்வொரு நாளும் 500 பேரை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் அனுமதிப்பதற்கும் —

ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துப் பாதை திறக்கப்பட்டதும் வவுனியாவில் இருந்து உணவுப்பொருள்களை எடுத்துச் செல்லும் லொறிகளில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வரும் லொறிகளில் பொருள்களை மாற்றி ஏற்றும் இடத்தில் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் பணியில் வவுனியா அரச செயலகம் நேற்று ஈடுபட்டது.

(இ-5-6-164)


மலிவு விலையில்!

- ஸ்கொட்டிங்பான்
- கொமேட்
- சுவர் மாபிள்
- நில மாபிள்
- நில விரிப்புக்கள்
- செருமிக் பிளேற்ஸ், கறிடிஸ்
- கப் & சோசர் வகைகள்

என்பன மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

நியூ விமாகி

27/3, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

(பஸ்தரிப்புக்கு முன்பாக)

(68026)


## விமானப்...

(முதலாம் பக்கத் தொடர்)

தாலும் குடும்பத் தலைவரோ அல்லது குடும்பத்தின் சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவரோ வந்து பயணச் சீட்டைக் கொள்வனவு செய்ய முடியும். அனைவரும் சமுகமளிக்கத் தேவை இல்லை.

பயணச் சீட்டைக் கொள்வனவு செய்யும்போது பயண நிபந்தனைகள் அடங்கிய ஆவணத்தில் கையெழுத்திடும் நடைமுறை இதுவரை யாழ். சிவில் நிர்வாக அலுவலகப் பகுதியிலேயே இடம்பெற்று வந்தது தற்பொழுது இந்த நடைமுறை பலாலிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பயணச் சீட்டைக் கொள்வனவு செய்யும் போது பயணம் செய்யும் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் சமுகம் அளித்து ஆவணத்திலும் கையெழுத்திடும் நடைமுறைக்குப் பதிலாக ஒருவர் சமுகம் அளித்து பயணச்சீட்டைப் பெறவும் பலாலியில் விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் அனைவரும் ஆவணத்தில் கையெழுத்திடவும் ஏற்பாடாகி உள்ளது.

அத்துடன் பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி கிடைத்தவுடனேயே பயணத்துக்கான விமானச் சீட்டைப் பெறுவதற்கான திகதியையும் பயணி தெரிந்து கொள்ளும் நடைமுறையும் அமுல் செய்யப்பட உள்ளது.

இந்தப் புதிய நடைமுறைகள் காரணமாக பயணிகள் சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து அலையும் சிரமங்கள் நீக்கப்பட்டிருப்பதாக சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

இம்மாதம் 20 ஆம் திகதி வரை விமானப் பயணத்துக்கான சகல ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டு விமானச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு விட்டன என்றும்—

20 ஆம் திகதிக்கு முன் பயணம் செய்யும் நோக்கத்துடன் பயணிகளை வீணாக வந்து அலைய வேண்டாம் என்றும் — சிவில் நிர்வாக அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## 20 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தப் புதிய முறைக்கு ஏற்ப கணனிகள் செயற்பட முடியாதுபோனதாலேயே தந்திகளை அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து நாள்களாகக் கிடைத்த தந்திகளே இவ்வாறு தேக்கமடைந்துள்ளன. [இ-5]

## நீலனின்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடம்பெற்ற கட்சியின் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆரம்பகால உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமனம் பெறும் இவர் இம்மாத இறுதியில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5-க)

## ஐ. தே. க....

(முதலாம் பக்கத் தொடர்)

சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க எமது அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இந்தப்பிரச்சினை குறித்து நன்கு ஆராய்ந்த பின்னர் செயற்திறன் வாய்ந்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 1992 ஆம் ஆண்டு இது குறித்து பலயோசனைகளைத் தெரிவித்துள்ளது.

எமதுஅரசாங்கம் சிறுபான்மைத்தமிழருக்கு ஒரு போதும் துரோகமிழைக்காதுஇவர்கள் எமது நிர்வாகம் மீது நம்பிக்கை வைத்து தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ், மற்றும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க எமது அரசாங்கம் பல தீர்மானங்களை எடுத்து செயல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

எமது அரசாங்கம் அரசமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து 4 ஆண்டுகளுக்கு முன்னர் யோசனைகளைத் தெரிவித்திருந்தது. எனினும் ஐ. தே. க. இந்த யோசனைகளை கவனத்தில் எடுக்கவோ அவற்றைச் செயற்படுத்துவதற்கான மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிக்கவோ தவறியுள்ளது.

விடுதலைப் புலிகளும் அரசாங்கத்தின் யோசனைகளுக்கு செவிசாய்க்கவில்லை.

புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க சமாதானப் பேச்சுக்களுக்கு முன்வருமாறு புலிகளைவற்புறுத்துவதில் பொதுமக்கள் ஐக்கியமுன்னணிக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் ஒருமைப்பாடு இருக்க வேண்டும்.

நாட்டில் சமாதானத்தை மீண்டும் நிலை நாட்ட எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஐ. தே. கவும், புலிகளும் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் புலிகளும், ஐ. தே. கவும் ஒத்துழைக்க மறுத்து வருகின்ற போதும் சிறுபான்மை சமூகத்தவர் மற்றும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஆகியோரது ஆதரவுடன் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-6)

## வழுக்கையாறு...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்றுக் காலை 10. 30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பஸ் வழுக்கையாற்றுவாய்க்காலுக்குள் விழுந்தபோதிலும் பயணிகள் எவரும் காயம் அடையவில்லை.

இந்த வீதியில் அண்மைக் காலங்களில் மூன்று பஸ் விபத்துக்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-185)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

எதிர்பார்க்கப்படுகிறது.

பொருள்கள் இறக்கி [illegible] பயணிகளுடன் இந்தக் கப்பல் திருகோணமலை நோக்கிப் புறப்படும். (இ)

# பாதைத்தடைக்குப்பின்னர் 'உணவு உற்பத்திப் போர்'

வவுனியா, ஒக. 8

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்கான போக்குவரத்து தடைப்பட்டதை அடுத்து வன்னியில் உணவு உற்பத்திப் போர் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீவசாயம் செய்யக்கூடிய ஒருதுண்டு நிலத்தையும் வீணாக விடாது அவற்றைப் பயன்படுத்தும் வகையில் வன்னி மக்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

நிலம் பயன்படுத்தப்படுவது மற்றும் பயிர்ச் செய்கை தொடர்பான கருத்தரங்குகளும் வன்னியில் நடைபெற்று வருகின்றன.

## மனித உரிமை ஆணைக்குழு

# கிளை அலுவலகங்களை மூடும் முடிவு கைவிடப்பட்டது

மட்டக்களப்பு, ஒக. 8

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்கள் எவையும் மூடப்படமாட்டா என ஆணைக்குழுவின் தலைவர் ஓ. ஏ. சி. செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, கல்முனை உட்பட ஆறு இடங்களில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகங்களை மூடிவிடும்படி ஜனாதிபதி அலுவலகம் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தது தெரிந்ததே.

இதனை அடுத்து வடக்கு—கிழக்கில் உள்ள அலுவலகங்களை மூட வேண்டாம் எனக்கோரி ஆணைக் குழுத் தலைவருக்கு ஜோசப் எம். பி. மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து எழுதிய கடிதத்திலே ஆணைக்குழுத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு — கிழக்குக்கு வெளியே ஏனைய இடங்களில் உள்ள அலுவலகங்களை மூடுவது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் ஆணைக் குழுத் தலைவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-6-21)

## பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

11 ரூபாவாக விற்கப்பட்ட மண்எண்ணெய் 15 ரூபாவாகவும் விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பால்மா வகைகளின் விலைகளும் உயர்ந்தே காணப்பட்டன.

வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு செல்லும் மக்கள் அதிகளவில் இந்தப் பொருள்களையே கொள்வனவு செய்வது வழக்கம். (இ-6-164)

## நாளை

பளைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட தட்டச்சு, தையல் போன்ற பயிற்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை திங்கள் காலை 10 மணிக்கு பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் த சிவலோகநாதனும், சிறப்பு விருந்தினராக விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர்(பயிற்சி) சி. சின்னத்துரையும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## புலிகள் - படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரதிநிதியின் மேற்பார்வையின் கீழ் நேற்று முன்தினம் மாலை 3. 30 மணியளவில் தமது முன்னணிக் காவலரண் பகுதிகளில் இருந்து பாதையின் தெற்கு நோக்கிய பகுதிகளில் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றும்பணியில் புலிகளும் ஈடுபட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வவுனியா மற்றும் மல்லாவி வதிவிடப் பிரதிநிதிகள் அந்த இடத்தில் தமக்கிடையில் றேடியோ தொலைத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். இதனை அடுத்து இரு தரப்பினரதும் முன்னணிக் காவலரண்கள் அமைந்துள்ள பிரதேசத்துக்குஇடைப்பட்டனர் பகுதியின் மையத்தில் வெள்ளைக் கொடிகளை நட்ட பின்னர் படையினரும் புலிகளும் மிக அருகருகே நின்று வீதித்தடை அரண்கள் மற்றும் முட்கம்பிகள் என்பவற்றை அகற்றும் பணிகளிலும் பதுங்குகுழிகளை நிரவும் பணிகளிலும் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் நடைபெற்ற பணிகளை புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் பார்வையிட்டார் என்றும் —

படையினர் தரப்பில் மேஜர் கொலம்பகே தலைமையில் படையினர் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் புலிகளது உறுப்பினர்களும் படை அதிகாரிகள் சிலரும் உரையாடியதையும் காணக்கூடியதாக இருந்தது. (இ-6-21-164)

## சர்வ மதப்...

(முதலாம் பக்கத் தொடர்)

மற்றும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

நேற்று ஆறாவது நாளாக நடைபெற்ற பிரார்த்தனையில் நூற்றுக்கணக்கான மாணவர்களும், இந்து, கிறிஸ்தவக் குருமார்களும் கலந்துகொண்டனர்.

இன்று இறுதி நாளாக நடைபெறும் சர்வமதப் பிரார்த்தனை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்தப் பிரார்த்தனையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை ஆயர் வணபிதா எஸ். ஜெபநேசன் ஆகியோர் உட்பட பல இந்து, கிறிஸ்தவ குருமார்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப் பிரார்த்தனையில் யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக வன்னி மாவட்ட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-5)


(சுனில் ஆட்ஸ்)

- 29-7-99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச் சுருள்களுக்கான படங்கள் வந்து விட்டன.
- 12-8-99 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
- உங்கள் கலர் புகைப்படங்களை நவீன தொழில் நுட்ப முறையில் கழுவிப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

சுனில் ஆட்ஸ்

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8460)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org